
www.padippakam.com


# வானவில்

VAANAVIL
ISSUE – 47, 48, 49 JANUARY 2015

இதழ் - 47, 48, 49 தை 2015


# நாட்டின் முன்னேற்றப் பயணம் பின்தள்ளப்படும் அபாயம்!




இலங்கை ஜனாதிபதி தேர்தல் எதிர்பார்த்ததை விட அமைதியான முறையிலும், நேர்மையான முறையிலும் நடந்து முடிந்துள்ளது. தேர்தலின் பின்னரான அதிகார கையளிப்பும் சுமுகமாக நடந்துள்ளது.

ஆனால் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் தற்போது வெற்றியீட்டியுள்ள எதிரணியினரும், உள்நாட்டு – வெளிநாட்டு பிற்போக்கு சக்திகளும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் அரசாங்கம் பெரும் தேர்தல் மோசடிகளில் ஈடுபடுவதற்கும், வன்முறைகளை கட்டவிழ்த்து விடுவதற்கும் திட்டமிட்டுள்ளதாக பல விதமான பொய் பிரசாரங்களை செய்தனர். அதையும் மீறி எதிரணி வெற்றி பெற்றால் இராணுவத்தின் உதவியுடன் ஆட்சியில் தொடர்வதற்கு மகிந்த திட்டமிட்டிருந்ததாகவும் பிரசாரம் செய்து வருகின்றன.

இப்படியான ஒரு தோற்றப்பாட்டை அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், ஐ.நா. போன்றனவும் ஏற்படுத்த முயன்றன. ஆனால் எல்லாவிதமான பொய் பிரசாரங்களையும் முறியடித்து மகிந்த அரசாங்கம் தேர்தலை வெற்றிகரமாக நடாத்தி முடித்ததுடன், தேர்தல் பெறுபேறுகள் முற்றாக வெளிவருவதற்கு முன்னரே ஜனநாயகத்தை மதித்து, தோல்வியை ஏற்று, மகிந்த அதிகாரத்தை சுமுகமாக கையளித்துவிட்டு, தனது உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரி மாளிகையை விட்டும் வெளியேறி சென்றார்.

அத்துடன் கடந்த 10 வருடங்களாக சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவராக இருந்த மகிந்த ராஜபக்ச, தனது தலைமைப்பதவியை ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்ற மைத்திரிபால சிறிசேனவிடம் கையளித்துள்ளார். சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளராக இருந்த மைத்திரிபால சிறிசேன நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் பொதுவேட்பாளராக போட்டியிட முடிவெடுத்தபோது, அக்கட்சியின் உறுப்புரிமையிலிருந்து நீக்கப்பட்டவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்தத்தேர்தலின் பின்னர் மகிந்த அரசு கடைப்பிடித்த ஜனநாயக நடைமுறையை, 1981இல் அப்போதைய ஜே.ஆர். தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் வட மாகாணத்தில் மாவட்ட அபிவிருத்தி

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க..

## புத்தாண்டு – தைப்பொங்கல் வாழ்த்துக்கள்!

'வானவில்' வாசகர்கள் அனைவருக்கும் புத்தாண்டு மற்றும் தைப்பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**-வானவில் வெளியீட்டுக்குழு**

**நூறு சிந்தனை மலரட்டும்**

படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் மக்களிடையே மாற்றம் நிகழ்வது எப்போது?

08.01.2015 இல் இலங்கையில் நடந்த ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபால சிறிசேனா வெற்றியீட்டியுள்ளார். இவர் இலங்கையின் பிரதான ஆளுங்கட்சிகளில் ஒன்றான சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளராக இருந்தவர். ஆனால் நடந்து முடிந்த தேர்தலில் பொதுசன ஐக்கிய முன்னணியின் வேட்பாளர், சிறீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவிற்கு எதிராக பொது வேட்பாளராக அதிரடியாக இவர் நிறுத்தப்பட்டார். இவரது திடீர் வேட்பாளர் நியமனம் 'எதிர்க்கட்சிகளின்' பொதுத்தெரிவு என்று கூறப்பட்டபோதிலும், ஐக்கிய தேசியக்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க, சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் முன்னாள் தலைவர் சந்திரிகா குமாரதுங்க மற்றும் இன்னோரன்ன உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகளே வேட்பாளர் தெரிவின் பின்னணியில் இருந்தனர்.

முள்ளிவாய்க்கலில் புலிகளுடான யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்த மகிந்த தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி அரசை கவிழ்க்க வேண்டுமென்பதில், கடந்த 5 வருடங்களாக உள்நாட்டு, வெளிநாட்டு தமிழர்களில் பெரும்பான்மையானவர்கள் மிகவும் வெறிப்பிடித்து அலைந்தனர். இதற்கு தீனி போடுவது மாதிரியாக, தமது நலன்களை மறைமுகமாக பின்னிறுத்தி, புலிகளுடான யுத்தத்தின்போது போர்க்குற்றங்கள் நிகழ்த்தப்பட்டதாகவும், யுத்தத்தின் பின்னர் மனித உரிமைகள் மீறப்படுவதாகவும் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளும் மகிந்த அரசு மீது குற்றம் சாட்டின. அத்துடன் ஐ.நா. மனித உரிமை சபையில் இலங்கை அரசுக்கெதிராக அமெரிக்கா தீர்மானங்களை கொண்டுவந்து நிறைவேற்றியது.

இந்து சமுத்திர பிராந்தியத்தில் இலங்கை மிகவும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் அமைந்துள்ளதாக காலங்காலமாக சொல்லப்பட்டு வருகின்ற போதிலும், அதனது உள்ளடக்கம் இலங்கையின் ஆளும் வர்க்கத்தினருக்கும் பெரும் இராணுவ, பொருளாதார வலிமை கொண்ட பிராந்திய, உலக வல்லரசுளுக்கும் புரிந்த ஒன்றாகவே இருக்கின்றது. அதாவது இலங்கையின் கேந்திர முக்கியத்துவத்தினை தமது கைக்குள் போடத் துடிக்கும் வல்லரசுகளின் முயற்சிகளை இலங்கை மக்களில் பெரும்பாலனவர்கள் உணர்ந்தவர்களாக இல்லையென்பதே இதன் அர்த்தம். தற்போது இலங்கையில் ஏற்பட்டிருக்கும் ஆட்சி மாற்றத்தின் பின்னணியில் அந்நிய சக்திகள் இருக்கின்றன என்பது தெட்டத்தெளிவாக தெரிகின்ற போதிலும் இதனை பகிரங்கமாக சொல்லாமல் எல்லா தரப்பினருமே அடக்கி வாசிக்கின்றனர். ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக ஐ.தேக. தலைவர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்கா சென்று படித்துவிட்டு வந்ததும், ஜனாதிபதி தேர்தலிற்கு முன்னைய தினம் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெர்ரி மகிந்த ராஜபக்சவுடன் தொலைபேசியில் கதைத்ததும் சகல ஊடகங்களிலும் வெளியான செய்திகளே. ஆனால் எந்த ஊடகமும் ரணிலுக்கு கிடைத்த அறிவுறுத்தல்கள் என்ன, ஜோன் கெர்ரி, மகிந்தவிற்கு போட்ட உத்தரவுகள் என்ன என்பது அலசியாராயவில்லை.

இலங்கையில் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்துவதில் அந்நியர்கள் தீர்மானகரமான பங்கை வகித்தார்கள் என்ற உண்மைகள் ஒருபுறமிருக்க, மகிந்தாவை தோற்கடித்தது தாமே என பல உள்ளூர் சக்திகள் அப்பாவித்தனமாக போட்டிபோட்டு கூறிக்கொண்டு இருக்கிறார்கள். மகிந்தா 4 இலட்சத்து 49 ஆயிரம் வாக்குகளால் தோல்வியுற்றமைக்கு காரணம், ஜாதிக ஹெல உறுமய சிங்களவர்களது வாக்குகளால்தான் என்றும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தமிழர் வாக்குகளால்தான் என்றும், முஸ்லீம் காங்கிரஸ் முஸ்லீம்களின் வாக்குகளால்தான் என்றும் அறிக்கைகள்விட்டு வருகின்றன.

இலங்கையில் காலத்துக்காலம் ஆட்சி மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. சிறிசேனா ஆட்சியும் ஒருநாள் கவிழத்தான் போகின்றது. இதனால்தான் மாற்றமென்பது மாற்ற முடியாதது என்று கூறுவார்கள். ஆனால் 66 வருட காலமாக இலங்கை தமிழர் அரசியலில் மாற்றம் எதுவும் நிகழவில்லை. எப்போதுமே குறுந்தேசியவாதிகளே பாராளுமன்ற பாதையிலும் சரி, ஆயதப்போராட்டத்திலும் சரி, தமிழரை வழி நடத்தி வந்தனர், வருகின்றனர். எந்த விதிகளுக்கும் அடங்காத இந்த தமிழரின் தலை விதியையெண்ணி நொந்து வேகுவதைத்தவிர வேறென்ன செய்ய முடியும்? *

---

## வானவில்

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com

இதுவரையில் வெளிவந்த வானவில் இதழ்களை **http://manikkural.wordpress.com/** என்ற இணையத்தள முகவரியில் வாசிக்கலாம்.

## வாசகர்களின் கவனத்திற்கு

*'வானவில்' இந்த இதழ் 2014 கார்த்திகை, மார்கழி மற்றும் 2015 தை (இதழ் 47 – 48 – 49)ஆகிய மூன்று மாதங்களுக்குமுரிய இதழாக வெளிவருகின்றது. தவிர்க்க முடியாத சில காரணங்களால் இதழ்களை காலக்கிரமமாக வெளியிடுவதில் ஏற்பட்ட இடைவெளியை நிவர்த்தி செய்வதற்காகவே இந்த ஏற்பாட்டைச் செய்துள்ளோம். அடுத்த இதழிலிருந்து (மாசி) மாதந்தோறும் 'வானவில்' கிரமமாக வெளிவரும் என்பதை வாசகர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம். கடந்த இரண்டு மாதங்களாக வானவில்லைக் காணாது அக்கறையுடன் எம்முடன் தொடர்பு கொண்ட அனைத்து வாசகர்களுக்கும் நன்றி*

**–ஆசிரியர் குழு**


படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் மக்களுக்கு தொடர்ந்து துரோகம் இழைத்து வரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு!



கடந்த 5 வருடங்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இரண்டு தடவைகள் தமிழ் மக்களின் நலன்களை ஒட்டுமொத்தமாக ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான பேரினவாத அணிக்கு தாரைவார்த்து தமிழ் மக்களுக்குத் துரோகம் இழைத்துள்ளது.

2009இல் புலிகள் ஒட்டுமொத்தமாக ஒழித்துக்கட்டப்பட்ட பின்னர், 2010இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் புலிகளுக்கு எதிரான போரில் முக்கிய பங்கு வகித்தவரும், வடக்கில் இராணுவத்துக்கென உயர் பாதுகாப்பு வலயங்களை உருவாக்கிய சூத்திரதாரியும், தமிழர்கள் இலங்கையில் வேண்டுமானால் இருந்துவிட்டுப் போகலாமே தவிர உரிமைக் கோரிக்கை எதனையும் எழுப்பக்கூடாது என ஆணவத்துடன் கனடிய ஊடகம் ஒன்றுக்குப் பேட்டியளித்தவருமான முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகவுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் பகிரங்கமாக ஆதரவளித்தனர்.

இந்த ஆதரவுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் எவ்விதமான நியாயத்தையும் கற்பித்துவிட முடியாது. ஏனெனில் சரத் பொன்சேக மனம் திருந்தி தமிழர்க்கு உரிமைகளை வழங்கலாம் என அந்தத் தேர்தலில் வாக்குறுதி எதனையும் கொடுத்துவிடவில்லை. குறைந்தபட்சம் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாக்குறுதி கொடுத்தது போல, "நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதி முறையை நீக்குவேன்" என்று தன்னும் சொல்லவில்லை. (தற்போதைய ஜனாதிபதி வாக்குறுதி அளித்தபடி அதை நீக்குவாரா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்)

இவ்வளவிற்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கிவிட்ட புலிகள் தோல்வியடைந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதல் ஒன்றையும் சரத் பொன்சேக மீது நடாத்தியிருந்தனர்.

தற்பொழுது மீண்டுமொரு முறை ஐ.தே.க. தலைமையிலான பொது எதிரணி வேட்பாளரான மைத்திரிபால சிறிசேனவை தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதித் தேர்தலில் ஆதரித்து அவரை பெற்றி பெறவும் வைத்துள்ளனர்.

***பாலன்***

இந்த முறையும் தேர்தலுக்கு முன்னர் மைத்திரிபால சிறிசேன தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதாக எவ்வித வாக்குறுதியையும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கியிருக்கவில்லை. அதுமாத்திரமின்றி, முன்னைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் தமிழ் கூட்டமைப்பு விடாப்பிடியாக வலியுறுத்தி வந்த வடக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்ற வேண்டும் என்ற கோரிக்கையைப் பொறுத்தவரையிலும் கூட, அவர் வாக்குறுதி எதனையும் கூட்டமைப்புக்கு வழங்கவில்லை. பதிலுக்கு தான் பதவிக்கு வந்தால் "வடக்கிலிருந்து இராணுவத்தை எக்காரணம் கொண்டும் அகற்றமாட்டேன்" என சிறிசேன தேர்தலுக்கு முன்னர் உறுதிபடக் கூறியிருந்தார்.

அதுமாத்திரமின்றி, ராஜபக்ச அரசாங்கம் புலிகளுடனான இறுதிப் போர் நடைபெற்ற வேளையில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களை இனப்படுகொலை செய்ததாக தமிழ் கூட்டமைப்பு தொடர்ந்தும் குற்றஞ்சாட்டி வருகிறது. அப்படிப் பார்த்தால், ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கும் வரை 10 வருடங்களாக ராஜபக்ச அரசாங்கத்தில் முக்கிய அமைச்சராகவும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளராகவும், இறுதிப் போரின் போது வெளிநாட்டுக்குச் சென்றிருந்த ராஜபக்சவுக்குப் பதிலாக இரு வாரங்கள் பதில் பாதுகாப்பு அமைச்சராகவும் செயலாற்றிய மைத்திபால சிறிசேனவும் ஒரு போர்க்குற்றவாளிதான்.



படிப்பகம்

www.padippakam.com

எனவே, போர்க்குற்றவாளி என ராஜபக்சவை எதிர்த்துக் கொண்டு, சரத் பொன்சேக, மைத்திரிபால சிறிசேன என்ற மற்றைய இரு போர்க் குற்றவாளிகளைத்தான் இரு தடவைகளிலும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எந்தவிதமான மனச்சங்கடமும், மனச்சாட்சியும், பயமும், வெட்கமும் இல்லாமல் ஆதரித்துத் தன்னை நம்பி வாக்களிக்கும் தமிழ் மக்களுக்கு பச்சைத் துரோகம் இழைத்துள்ளது. தமிழ் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கிய புலிகள் (அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன்) 2005 ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு வேட்பாளருக்கும் ஆதரவளிக் மறுத்ததைக் கூட கூட்டமைப்பினர் கணக்கில் எடுக்கவில்லை. (பிரபாகரன் தொலைந்துவிட்டார், இனி அவர் வருவதாவது, எம்மைத் தண்டிப்பதாவது என்ற துணிச்சல்தான் காரணமோ என்னவோ?)

தமிழ் தேசியக் கூட்டமைப்பு திருப்பித் திருப்பி ஒரு குற்றத்தைச் செய்து வருவதை, தற்செயலான அரசியல் தவறு என்றோ, இது அவர்கள் தெரியாத்தனமாகச் செய்த முதல் தவறு என்றோ ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. ஏனெனில் தமிழர்களின் முதல் அரசியல் கட்சியான தமிழ் காங்கிரஸ் கட்சி முதல் பின்னர் வந்த தமிழரசுக் கட்சி, அடுத்து வந்த தமிழர் விடுதலைக் கூட்டணி, தற்போதைய தமிழ் தேசியக் கூட்டமைப்பு என அன்றிலிருந்து இன்றுவரை, ஒருபக்கத்தில் தமிழர் உரிமை பற்றிப் பேசிக்கொண்டு, மறுபக்கத்தில் சிங்களப் பேரினவாத ஐ.தே.கவுடன் கூடிக்குலாவிய வரலாறு தமிழ் தலைமைகளுக்கு உண்டு.(அந்த வரலாற்றை இன்னொரு கட்டுரையில் விரிவாக ஆராய்வோம்)

ஐ.தே.கவுடன் தமிழ் தலைமைகளின் இந்தக் கூடிக்குலாவல் தற்செயலான ஒன்றல்ல. அதன் அடிப்படையாக இருப்பது இன வேறுபாடுகளைக் கடந்த வர்க்க ஐக்கியம். அதாவது சிங்கள பெரு முதலாளித்துவ பிற்போக்கு சக்திகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஐ.தே.கவுக்கும், தமிழ் முதலாளித்துவப் பிற்போக்கு சக்திகளைப் பிரதிநிதித்துவம் தமிழ் தலைமைகளுக்கும் (இன்று அது தமிழ் தேசியக் கூட்டமைப்பு) இடையிலான வர்க்க நலன் சார்ந்த அரசியல் ஐக்கியமாகும்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் சிங்கள மக்கள் மத்தியிலுள்ள இன்னொரு முதலாளித்துவக் கட்சியாக இருந்த போதிலும், அக்கட்சியுடன் தமிழ் முதலாளித்துவத் தலைமைகள் ஒருபோதும் அரசியல் கூட்டு வைத்ததில்லை. அதற்குக் காரணம் சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஏகாதிபத்தியத்தை எதிர்க்கின்ற தேசபக்தியுள்ள தேசிய முதலாளிகளைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற கட்சி என்றபடியால், ஏகாதிபத்திய சார்பான தமிழ்த் தலைமைகளால் அதனுடன் ஒருபோதும் கூட்டுச்சேர முடியாது. தம்மை ஒத்த ஏகாதிபத்திய சார்பு ஐ.தே.கவுடன்தான் அவர்களால் கூட்டுச்சேர முடியும்.

அதனால்தான், ஒரு மேதினத்தின் போது தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தொழிலாள வர்க்கத்தின் பரம வைரியான ஐ.தே.கவுடன் யாழ்ப்பாணத்தில் கூட்டாக மேதினம் கொண்டாடியதுடன், கூட்டமைப்பின் தலைவர் இ.சம்பந்தன் வெட்கம் மானம் ரோசம் ஏதுமின்றி ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இலங்கையின் தேசியக் கொடியான சிங்கக் கொடியையும் கூட்டாகத் தூக்கிப் பிடித்தார்.

இந்த மாதிரியெல்லாம் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கு எவ்வித பயமுமின்றித் துரோகம் செய்வதற்குக் காரணம், ‘தமிழ் மக்கள் ஒரு மந்தைக் கூட்டம், நாம் என்ன சொன்னாலும் மறுப்பேதும் இன்றித் தலையாட்டுவார்கள்’ என்ற தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைமையின் எண்ணம்தான்.

இனிமேலாவது தமிழ் மக்கள் தமக்கு வெளியில் உள்ள புற எதிரிகளைத் தேடுவதற்கு முன்னர், தமக்குள்ளேயே ஒளிந்து நின்றுகொண்டு கழுத்தறுக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு போன்ற துரோகத்தனமான எதிரிகளை இனம் கண்டு களை எடுக்க வேண்டும். அதைச் செய்யாத வரை இன்னுமொரு நூறு வருடங்கள் போனாலும் தமிழ் மக்கள் விமோசனம் பெற முடியாது. *

## அமெரிக்காவின் கியூபக் கொள்கை முற்றுமுழுதான தோல்வி!


1959ஆம் ஆண்டு கியூபா புரட்சி ஃபிடெல் கஸ்ட்ரோ தலைமையில் வெற்றி பெற்றது. தனது தாழ்வாரத்தில் நடந்த அந்த சோசலிசப் புரட்சியை சகித்துக் கொள்ளாத அமெரிக்கா 1962ஆம் ஆண்டு முதல் அந்தச் சின்னஞ்சிறிய நாட்டின் மீது பொருளாதாரத் தடை விதித்தது. அந்தப் பொருளாதாரத் தடையால் அந்த நாட்டின் அப்பாவி மக்கள் பாதிக்கப்படுவது குறித்து பெரிதாக ஜனநாயகம் பேசி வரும் அமெரிக்காவின் எந்தவொரு ஜனாதிபதியும் கவலைப்படவில்லை.

ஆனால் அமெரிக்காவின் இந்தக் கொடுமையான பழிவாங்கலைத் தாங்கிக்கொண்டு தமது தாய்நாட்டின் சுதந்திரத்தை விட்டுக் கொடுக்காது கியூப மக்கள் தமது சோசலிசப் பாதையில் தொடர்ந்து முன்னேறி வந்தனர்.

இறுதியில் அமெரிக்காவின் 54 வருட கியூபக் கொள்கை தோல்வி கண்டுவிட்டது என்பதை அமெரிக்க அதிபர் ஒபாமா அண்மையில் ஏற்றுக் கொண்டுள்ளார். அதன் அடிப்படையில் கியூபாவின் சோசலிச அரசாங்கத்துடன் முழு அளவிலான இராஜதந்திரத் தொடர்புகளை ஏற்படுத்த அமெரிக்கா தீர்மானித்துள்ளது. பொருளாதாரத் தடையையும் நீக்குவது பற்றி ஒபாமா அரசு பரிசீலித்து வருகிறது. நீதியான இலட்சியங்கள் ஒருபோதும் தோற்றுப் போவதில்லை என்பதற்கு கியூபா ஒரு மாபெரும் உதாரணமாக உலக அரங்கில் எழுந்து நிற்கிறது. *

www.padippakam.com

# இலங்கையின் குடும்ப வாரிசு அரசியல் வரலாறு




ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் மட்டுமின்றி, அதற்கு முன்னரும் தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் குடும்ப உறுப்பினர்களும், அவரது நெருங்கிய உறவினர்களும் அரசாங்கத்தில் முக்கிய பொறுப்புகளில் அமர்த்தப்பட்டிருப்பது பற்றி பேசப்பட்டு வந்துள்ளது. இதை பொதுவாக “குடும்ப வாரிசு அரசியல்” என அரசியல் வட்டாரங்களில் அழைக்கப்படுவது வழமை.

ராஜபக்ச குடும்பத்தினர் மீது வைக்கப்படும் இந்தக் குற்றச்சாட்டுகளில் ஓரளவு உண்மை இல்லாமலும் இல்லை. இந்த குற்றச்சாட்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவையும் தாக்கியுள்ளது என்பதை அண்மையில் அவதானிக்க முடிந்தது. இந்தக் குற்றச்சாட்டுக்குப் பதில் அளித்த அவர், தனது ஒரு சகோதரரான பாராளுமன்ற சபாநாயகராக இருக்கும் சமல் ராஜபக்சவையும், இன்னொரு சகோதரரான பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்சவையும் தான் அரசியலுக்குக் கொண்டு வரவில்லை என்றும், அவர்களை முன்னாள் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியும், சந்திரிகாவின் தாயாருமான சிறிமாவோ பண்டாரநாயக்கவே அரசியலுக்குக் கொண்டு வந்ததாகவும் குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன் அவரது இன்னொரு சகோதரரான பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவை மட்டுமே புலிகளுடனான போரின்போது ஒரு நம்பிக்கையான ஆள் தேவை என்பதற்காக தான் கொண்டு வந்ததாகவும் குறிப்பிட்டிருந்தார். அவரது இந்தக் கூற்றுகளில் ஓரளவு உண்மை இருந்தாலும், இன்னும் பல அவருடைய நெருங்கிய உறவினர்கள் (மக்களால் தெரிவு செய்யப்படாதவர்கள்) அரச உயர் பதவிகளில் வீற்றிருக்கிறார்கள் என்ற அவர் பதில் சொல்ல முடியாத உண்மையும் மறுபக்கத்தில் இருக்கிறது.

ஆட்சியில் இருப்பவர்கள் தமது குடும்ப உறுப்பினர்களாக இருப்பவர்களை அரசியல் வாரிசுகளாகக் கொண்டு வருவதற்கு அநேகமான நாடுகளில் எந்தவிதமான தடையும் இல்லை. ஆனால் ஜனநாயக உணர்வுள்ள ஆட்சித் தலைவர்கள் அது தார்மீக ரீதியிலான தவறு எனக்கருதி அதைச் செய்வதில்லை.

இலங்கை மட்டுமின்றி இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஸ் உட்பட பெரும்பாலான தென்னாசிய நாடுகளில் குடும்ப வாரிசு அரசியல்தான் கொடிகட்டிப் பறக்கிறது. இந்தக் குடும்ப வாரிசு அரசியலைப் பொறுத்தவரையில் சாமானிய மக்கள் அதை எதிர்ப்பதில் எவ்விதமான தவறும் இல்லை. ஆனால் அதிகாரத்துக்கு வரத்துடிக்கும் அல்லது முன்னர் ஆட்சியில் இருந்து அதை இழந்துபோன (முதலாளித்துவ) அரசியல்வாதிகள் மற்றவர்களைப் பார்த்து இந்தக் குற்றச்சாட்டைச் சுமத்துவதுதான் அபத்தமானதாகவும், ஏற்றுக்கொள்ள முடியாததுமாகும். உதாரணத்துக்கு, இலங்கையின் குடும்ப அரசியல் வரலாற்றை எடுத்துப் பார்ப்போம்.

இலங்கையில் குடும்ப அரசியலை முதன்முதலில் ஆரம்பித்து வைத்தவர் ‘தேசபிதா’ என வர்ணிக்கப்படும் சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமர் டி.எஸ்.சேனநாயக்க தான். டி.எஸ்.சேனநாயக்கவுக்குப் பின்னர் அவரது மகன் டட்லி சேனநாயக்க ஐக்கிய தேசியக் கட்சித் தலைவராகவும், பிரதமராகவும் பதவி வகித்தார். ஆனால் டட்லி சேனநாயக்க உத்தியோகபூர்வமாகத் திருமணம் செய்துகொள்ளாதபடியால் அவரால் தனது வாரிசு ஒன்றை அரசியலில் உருவாக்க முடியாமல் போய்விட்டது. இருந்தாலும் டட்லியின் மறைவின் பின்னர் அவரது பெறாமகனான ருக்மன் சேனநாயக்க ஐ.தே.கவின் தலைமைப் பதவியைக் கைப்பற்ற பல வழிகளிலும் முயன்றார். ஆனால் முடியவில்லை.

அதற்குக் காரணம் ஆரம்பத்தில் இருந்தே டட்லிக்கு எதிராக கட்சியின் தலைமைப் பதவியைக் கைப்பற்றுவதற்கு பல வழிகளிலும் முயன்று வந்த ‘அரசியல் குள்ள நரி’யான ஜே.ஆர்.ஜெயவர்த்தன அதற்கு இடமளிக்கவில்லை. அரசியல் தந்திரியான ஜே.ஆரின் முன்னால், அரசியல் ‘பால்குடி’யான ருக்மன் சேனநாயக்கவால் நின்று பிடிக்க முடியவில்லை.

**சுப்பராயன்**

ஆனால் ஜே.ஆராலும் தனது அரசியல் வாரிசை உருவாக்க முடியாமல் போய்விட்டது. அவருக்கு ரவி என்ற ஒரு மகன் இருந்து, அவர் ஒரு தமிழ் பெண்ணைத் திருமணம் செய்து பிள்ளைகளையும் பெற்ற பின்னர் மனைவியைக் கைகழுவி விட்டுவிட்டார். அத்துடன் அவர் தனது தந்தையார் ஜே.ஆர். போல அரசியலில் அவ்வளவாக ஈடுபாடும் கொண்டிருக்கவில்லை. புலிகளுடனான யுத்த காலத்தில் ஜே.ஆரால் புதிதாக உருவாக்கப்பட்ட விசேட அதிரடிப்படைக்கு தனது மகனை ஜே.ஆர். பொறுப்பாக நியமித்திருந்தாலும், அதற்கு அப்பால் அவர் நகரவில்லை. இந்தச் சூழலிலேயே ஜே.ஆர். ஐ.தே.கவின் தலைமைப் பதவியை ஆர்.பிரேமதாசவிடம் ஒப்படைக்க வேண்டிய நிர்ப்பந்தமான சூழல் ஏற்பட்டது.

ஆனால் பிரேமதாசவைப் பொறுத்தவரையில் அவர் உயிரோடு இருக்கையிலேயே தனது மனைவி ஹேமாவையும், மகன் சஜீத்தையும் திட்டமிட்ட முறையில் தனது அரசியல் வாரிசுகளாக உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார். ஆனால் எதிர்பாராத விதமாக புலிகளால் அவர் மனித வெடிகுண்டு மூலம் கொல்லப்பட்டதால் அவரது கனவு நனவாகவில்லை. இந்தச் சூழ்நிலையிலேயே சிறுவனாக இருந்த

www.padippakam.com

சஜீத் பிரேமதாசவைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு ரணில் விக்கிமசிங்க ஐ.தே.கவின் தலைமையைக் கைப்பற்றினார்.

ரணிலுக்கு உள்ள ஒரே தகுதி அவரது குடும்பம் பாரம்பரியமாக ஐ.தே.க குடும்பம் என்பதும், அவர் ஜேஆர்.ஜெயவர்த்தனவின் மருமகன் என்பதும்தான். இருந்தாலும் அவரால் ஐ.தே.கவை வெற்றிப்பாதைக்கு இட்டுச்செல்ல முடியவில்லை. அத்துடன் அவரை ஐ.தே.கவிலுள்ள சஜீத் பிரேமதாச, கரு ஜெயசூரியா போன்றவர்கள் பதவியிலிருந்து நீக்க முயன்ற போதிலும், ரணில் அழுங்குப் பிடியாக தலைமைப் பதவியை பிடித்து வைத்திருக்கிறார். இருப்பினும் அவருக்குப் பிள்ளைகள் இல்லாததால், அவருக்குப் பின்னர் ஐ.தே.கவின் தலைமைப் பதவி வேறு எவருக்காவது போகத்தான் போகிறது. இப்போதுள்ள நிலைமையில் ''அண்ணை எப்போது போவார், திண்ணை எப்போது காலியாகும்'' என சஜீத் பிரேமதாச காத்திருப்பதை அவதானிக்க முடிகிறது.

மறுபக்கத்தில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் வரலாற்றை எடுத்துப் பார்த்தால் அங்கும் இதே கதைதான். (அதற்காக ஐ.தே.கவினதும் சிறீ.ல.சு.வினதும் கொள்கைகள் ஒன்று என்பது இதன் அர்த்தம் அல்ல)

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதம ஸ்தாபகர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்க பிரதமராகப் பதவி வகித்த காலத்தில் 1959 செப்ரெம்பரில் பிற்போக்கு சக்திகளால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட பின்னர், கட்சியில் பல மூத்த தலைவர்கள் இருந்தபோதும், அவரது மனைவி சிறீமாவோ தான் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். பல தடவைகள் பிரதமராகவும் பதவி வகித்தார்.

சிறீமாவோவைப் பொறுத்தவரையில் தனது அரசியல் வாரிசுகளாக தனது பிள்ளைகள் எல்லோரையும் கருதியிருந்தார். குறிப்பாக மகன் அனுர மீது அளவுகடந்த பாசமும் நம்பிக்கையும் வைத்திருந்தார். ஆனால் அவரது மூத்த மகள் சுனேத்ராவைத் திருமணம் செய்திருந்த குமார் ரூபசிங்கவும் 'ஜனவேகய' (தமிழில் ஜனவேகம்) என்ற பத்திரிகை இயக்கத்தின் மூலம் அரசியலில் பிரவேசிக்க முயன்றார். அவரது இடதுசாரி சார்பான கொள்கைகளை சிறீமாவோ சகித்துக் கொண்டாலும், கட்சிக்குள் வலதுசாரி சக்திகளின் செல்லப்பிள்ளையாக இருந்த அனுரவினால் அதைச் சகிக்க முடியவில்லை. அதனால் ரூபசிங்க சிறீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து ஒதுங்கியதுடன், அவரது குடும்பமும் பிரிந்தது.

அதேபோல, சந்திரிகாவைத் திருமணம் செய்திருந்த விஜயகுமாரதுங்கவும் ஓரளவு இடதுசாரி சார்பான அரசியல் எண்ணப்பாடுகளைக் கொண்டிருந்தார். அவரது முயற்சிகளுக்கு சந்திரிகாவும் அனுசரணையாக இருந்தார். ஆனால் அவரையும் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் தலையெடுப்பதற்கு அனுர இடமளிக்கவில்லை. அதனால் அவரும், சந்திரிகாவும் கட்சியை விட்டு விலகிச் சென்று சிறீலங்கா மக்கள் கட்சி என்ற புதிய கட்சியை உருவாக்கினார்கள். ஆனால் ஜே.வி.பியினர் விஜயகுமாரதுங்கவை சுட்டுப் படுகொலை செய்ததின் காரணமாக அந்தக் கட்சியும் ஸ்தம்பித நிலையை அடைந்தது. (1970 – 1977 காலகட்ட ஐக்கிய முன்னணி அரசாங்கத்திலிருந்து இடதுசாரிக் கட்சிகளான கம்யூனிஸ்ட் கட்சியும், லங்கா சமசமாஜக் கட்சியும் விலகிச் சென்றதற்கும் அனுர தான் காரணமாக இருந்தார்)

தனது சகோதரிகளின் குடும்பங்களை சிறீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து ஓரம்கட்டிய அனுர, தானும் சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்று வழிநடாத்தவில்லை. அவரது சிறுபிள்ளைத்தனமான வேலைகளால் கட்சியின் பிம்பம் மக்கள் மத்தியில் பாதிக்கப்பட்டதுடன், இறுதியில் அவரும் தனது தந்தையும் தாயும் கனவிலும் நினைத்துப் பார்க்காத வகையில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பரம வைரியான ஐ.தே.கவில் இணைந்து கொண்டார்.

இந்தக் கையறு நிலையிலேயே தனது ஒரே தெரிவாகவும், நம்பிக்கையாகவும் இருந்த சந்திரிகாவை சிறீமாவோ சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவிக்குக் கொண்டு வந்தார். அவரது ஒரே நோக்கம் சிறீலங்கா சுதந்திரக் கட்சியை எப்படியும் பண்டாரநாயக்க குடும்பத்தின் கைகளில் வைத்திருக்க வேண்டும் என்பதே.

சந்திரிகா இரண்டு தடவைகள் ஜனாதிபதியாக இருந்துவிட்டு (அப்போதைய அரசியல் சாசனத்தின் பிரகாரம் இரண்டு தடவைக்கு மேல் பதவி வகிக்க முடியாது. மகிந்தவின் யோசனை அவருக்கு வந்திருந்தால் அரசியல் சட்டத்தைத் திருத்தி அவரும் மூன்றாவது தடவையாகவும் பதவி வகித்திருக்கக்கூடும்) பதவி விலகினார். அவருக்கும் தனது தாயாருக்கு இருந்தது போல குடும்ப வாரிசு அரசியல் அபிலாசை நிச்சயமாக இருந்திருக்கும். ஆனால் அவரது மகளும், மகனும் சிறு பராயத்தில் இருந்ததால், அவர்களை அரசியலுக்கு தனது வாரிசுகளாகக் கொண்டுவரும் சூழல் அன்று இருக்கவில்லை. இந்த நிலைமையில்தான் ஜே.ஆர். எப்படி ஐ.தே.கவை விருப்பமின்றி பிரேமதாசவிடம் கையளித்தாரோ அதேபோல சிறீலங்கா சுதந்திரக் கட்சியை மகிந்த ராஜபக்சவிடம் கையளிக்க வேண்டிய நிலைமை சந்திரிகாவுக்கு ஏற்பட்டது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவைப் பொறுத்தவரை, அவருக்கு ஒரு நீண்ட குடும்ப அரசியல் பின்னணி உள்ளது. அவரது தகப்பனார் டி.ஏ.ராஜபக்ச பண்டாரநாயக்கவுடன் இணைந்து சிறீலங்கா சுதந்திரக் கட்சியை ஸ்தாபித்தவர்களில் ஒருவர். அதற்கு முன்னர் அவர்களது சொந்தப் பிரதேசமான அம்பாந்தோட்டையில் 'குரக்கன் கட்சி' (அங்கு குரக்கன் ஒரு பிரதான பயிர்ச்செய்கை) என்ற ஒரு கட்சியை உருவாக்கி அதில் தேர்தலில் நின்று வெற்றியும் பெற்றவர். அவர் தனது கட்சியின் நிறமாக குரக்கன் தானியத்தின் நிறத்தை வைத்திருந்தபடியால் அதன் நிறத்தில் சால்வையும் அணிந்தார். அதைப் பின்பற்றித்தான் மகிந்தவும் அவரது சகோதரர்களும் இன்று அதே குரக்கன் நிறத்தில் சால்வை அணிகிறார்கள்.

மகிந்தவின் மூத்த சகோதரர் ஜோர்ச் ராஜபக்ச சிறீமாவோ அரசில் முக்கியமான கடற்தொழில் அமைச்சராகப் பதவி வகித்தவர். இலங்கை – சோவியத் நட்புறவுச் சங்கத்தின் தலைவராகவும் நீண்டகாலம் பதவி வகித்தவர். மகிந்த இலங்கையிலேயே மிகக் குறைந்த வயதில் பாராளுமன்றத்திற்குத் தெரிவானவர். (மகிந்தவும் இலங்கை – பலஸ்தீன நட்புறவுச் சங்கத்தின் தலைவராக 25 வருடங்களுக்கும் மேல் பதவி வகித்தவர்) அவரது சகோதரர்களும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் நீண்டகாலமாக அங்கத்தவர்களாக உள்ளவர்கள். இந்தப் பின்னணியில்தான் சந்திரிகாவுக்குப் பின்னர் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராகவும், நாட்டின் தலைவராகவும் மகிந்தவால் வர முடிந்தது.

மகிந்த பதவிக்கு வந்ததும் இலங்கை அரசியல்வாதிகள் எல்லோருக்கும் உள்ள வியாதி அவரையும் தொற்றிக் கொண்டது. அதில் ஒன்று தனது குடும்ப அங்கத்தவர்களையும், நெருங்கிய உறவினர்களையும் அரசின் முக்கிய பதவிகளுக்கு நியமித்தது. இன்னொன்று தனக்குப் பின்னர் நாட்டை நிர்வகிக்க ஒரு வாரிசை உருவாக்கும் முயற்சி.

www.padippakam.com

பாராளுமன்ற உறுப்பினராக இப்பொழுது இருக்கும் தனது மகன் நாமல் ராஜபக்சவை அவர் தனது எதிர்கால அரசியல் வாரிசாக வளர்த்து வருகிறார் என்பதற்கான அறிகுறிகள் நிறைய இருக்கின்றன.

இப்படியான ஒரு சூழ்நிலையில்தான் தற்போதைய ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தேர்தலில் மகிந்த ராஜபக்சவை எதிர்த்து முறைப்படி பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க அல்லது அவரது கட்சியைச் சேர்ந்த வேறு ஒருவர் போட்டியிட்டிருக்க வேண்டும். ஆனால் அது நடைபெறவில்லை. அதற்குக் காரணம் என்ன?

ரணில் தொடர்ச்சியாக 20இற்கும் அதிகமான ஐ.தே.க தேர்தல் தோல்விகளுக்கு தலைமை தாங்கியதால், அவர் போட்டியிட்டால் அவரை ராஜபக்ச சுலபமாகத் தோற்கடித்துவிடுவார் என்ற ஒரு காரணமே ரணில் போட்டியிடாததற்கு கூறப்படுகிறது. அப்படியானால் கட்சியில் அடுத்த வரிசையில் போட்டியிடுவதற்குக் காத்திருந்த கரு ஜெயசூரியா அல்லது சஜீத் பிரேமதாச இவர்களில் யாராவது ஒருவர் போட்டியிட்டிருக்கலாம் தானே என்ற கேள்வி எழுகிறது. இங்குதான் சந்திரிகாவின் திட்டமிட்ட செயற்பாடு கவனத்துக்கு வருகிறது.

ஐ.தே.க கட்சியைச் சேர்ந்த ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுவதை சந்திரிகா விரும்பவில்லை. ரணில் தற்செயலாக ஜனாதிபதியாகத் தெரிவானாலும் அவருக்கு பிள்ளைகள் இல்லாதபடியால் அவரால் வாரிசு அரசியலை உருவாக்க முடியாது. இருப்பினும் ஐ.தே.க வசம் ஜனாதிபதி பதவி ஒருமுறை போய்விட்டால், பின்னர் அதை திருப்பி எடுப்பது சிரமம். ரணிலுக்குப் பின்னர் சஜீத் பிரேமதாசவோ அல்லது வேறு யாரோ பதவிக்கு வந்துவிடுவார்கள். அத்துடன் ஐ.தேகவையும், மகிந்தவையும் ஒரேநேரத்தில் எதிர்த்துக் கொண்டு சந்திரிகா தனக்கு விரும்பியவரை ஆட்சிக்குக் கொண்டு வருவதும் சாத்தியமில்லை.

சந்திரிகா இந்தத் தேர்தலில் தீவிரமாக இறங்கியதற்குக் காரணமே திரும்பவும் பண்டாரநாயக்க வமிசத்தின் அதிகாரத்தை சிறீலங்கா சுதந்திரக் கட்சியிலும், நாட்டிலும் நிலைநாட்டும் நோக்கத்துடன்தான். தனக்கு எவ்வித பதவி ஆசையும் இல்லை எனவும், 9 வருடங்களாக ஒதுங்கி இருந்த தான் நாட்டைப் பாதுகாக்கவே திரும்பவும் தீவிர அரசியலில் ஈடுபடத் தீர்மானித்ததாகவும், குருசேத்திரப் போரில் அருச்சுனனுக்கு கிருஸ்ணன் கீதையை உபதேசித்த கணக்காக சந்திரிகா கதை விடுகிறார். உண்மை அதுவல்ல.

மகிந்த ஆட்சியின் கீழ் நாட்டு மக்கள் துன்பப்படுவதை பார்த்துக்கொண்டு ஏன் அவர் ஒன்பது வருடங்களாகப் பொறுமையாக இருந்தார்? அப்படி இருந்தவர் ஏன் ஜனாதிபதி தேர்தல் வந்ததும் மட்டும் துள்ளி எழுந்தார்? அங்கேதான் விடயமே அடங்கி இருக்கிறது.




தனது மகன் விமுக்தி வளர்ந்து ஆள்பட்டு, அரசியலுக்கு வருவதற்கு தயாராகும்வரை அவர் 9 வருடங்களாகக் காத்திருந்தார் என்பதே உண்மை. அவரது பிள்ளைகள் அந்த நேரத்தில் சிறுவர்களாக இருந்தபடியால்தான், அவரால் மகிந்தவிடம் கட்சியின் பொறுப்புகளைக் கையளிப்பதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை. அப்படியில்லாமல் வழி ஏதும் இருந்திருந்தால் மகிந்தவிடம் ஒருபோதும் அவர் கட்சி தலைமையை ஒப்படைத்து இருக்கவேமாட்டார்.

இந்தத் திட்டத்தினால்தான் சந்திரிகா ரணிலைச் சம்மதிக்க வைத்து, மைத்திபால சிறிசேனவை எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராகக் கொண்டு வந்தார். ஏனெனில் மைத்திரி மகிந்த அல்லது ரணில் போன்ற தேசியத் தலைவர் அல்ல. அவருக்கென குறிப்பிட்ட மக்கள் செல்வாக்கு எதுவும் கிடையாது. பெரிய பண பலமோ, அதிகார பலமோ, அடியாட்கள் பலமோ கிடையாது. எனவே சந்திரிகாவின் சட்டம்பிள்ளை பிரம்புக்கு அடங்கி நடக்கக் கூடியவர் மைத்திரி. முதலில் மைத்திரியை ஜனாதிபதி ஆக்கவிட்டால், ரணிலுக்குத் தலையைச் சுற்றிவிட்டு தனது பிள்ளைகளில் ஒருவரை நாட்டின் தலைமைப் பதவிக்குக் கொண்டு வருவதே சந்திரிகாவின் 'மாஸ்டர் பிளான்'.

சந்திகாவின் இந்த கபடத்தனமான திட்டத்தை மணந்து பிடித்தபடியால்தான், மகிந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டி தனக்கும் மைத்திரிக்கும் அல்ல போட்டி, தனக்கும் சந்திரிக்காவுக்கும்தான் போட்டி எனச் சொல்லவேண்டி வந்தது.

இந்தத் தொடர் சம்பவங்களைப் பார்க்கும்போது ஒரு உண்மை புலனாகின்றது. அதாவது மகிந்தவைப் பார்த்து குடும்ப அரசியல் செய்கிறார் என்று குற்றம் சாட்டுபவர்கள் எல்லோருமே கண்ணாடி வீட்டுக்குள் இருந்துகொண்டு கல் எறிகிறார்கள். இவர்களில் சிலர் ஏற்கெனவே குடும்ப அரசியல் நடாத்தி அதை இழந்ததால், திரும்பவும் அதைப் பெறத் துடிப்பவர்கள். சிலர் புதிதாக அதைப் பெறுவதற்குக் காத்திருப்பவர்கள்.

எனவே மகிந்தவைப் பார்த்து "குடும்ப அரசியல் செய்யாதே" எனக் கோருவதற்கு நாட்டு மக்களுக்கு மட்டுமே உரிமை உள்ளதேயொழிய, அந்த உரிமை சந்திரிக்காவுக்கோ அல்லது ரணிலுக்கோ அல்லது சயித் பிரேமதாசவுக்கோ இல்லை என்பதே உண்மையாகும்.

(இந்தக் கட்டுரை ஜனாதிபதி தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் எழுதப்பட்டது. அதன் முக்கியத்துவம் ஜனாதிபதி தேர்தல் முடிந்த பின்னரும் பிரசுரிக்கப்படுகின்றது)

**"மக்கள், மக்கள் மட்டுமே வரலாற்றின் உந்துசக்திகள் ஆவர்"**

**- மாஓ**

"வேலை நிறுத்தங்கள் இராணுவப் பள்ளிகளாகும். இவற்றில் தொழிலாளர்கள் ஏற்கெனவே தவிர்க்க முடியாததாக மாறியுள்ள மாபெரும் போராட்டத்திற்குத் தயாராகின்றனர். மாபெரும் தொழிலாளர் இயக்கத்துடன் தான் இணைந்துவிட்டதைப் பறைசாற்றும் தொழிலாளி வர்க்கத்துக்குத் தனிப் படைகளின் நடவடிக்கையாக இவை விளங்குகின்றன"

**-ஏங்கெல்ஸ்**

www.padippakam.com

## உலகை ஆளப் புறப்பட்டு தனக்கே சவக்குழி தோண்டிய ஹிட்லர்

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது, உலகம் முழுவதையும் கபளீகரம் செய்யப் புறப்பட்ட ஜெர்மானிய சர்வாதிகாரி ஹிட்லர், ஐரோப்பிய நாடுகள் பலவற்றைத் தாக்கி கைப்பற்றிய பின்னர், ஸ்டாலின் தலைமையில் இருந்த சோசலிச சோவியத் யூனியனைக் கைப்பற்றும் முயற்சியில் இறங்கினான். ஆனால் அதுவரை தங்குதடையின்றி முன்னேறி வந்த ஹிட்லரின் படைகளுக்கு சோவியத் யூனியனில்தான் புதைகுழி தோண்டப்பட்டது.

ஸ்டாலின் தலைமையில் போரிட்ட சோவியத் செஞ்சேனை ஹிட்லரின் படைகளை சோவியத் மண்ணில் தோற்கடித்தது மட்டுமின்றி, நாஜிகளின் கொத்தளமான ஜெர்மனி வரை விரட்டிச் சென்றது. அந்தப் போரில் சோவியத் செஞ்சேனையால் கொல்லப்பட்ட, காயப்படுத்தப்பட்ட, கைது செய்யப்பட்ட ஹிட்லரின் படைகளின் மொத்த எண்ணிக்கை 10 இலட்சம் (1 மில்லியன்) ஆகும்!

## ஆப்கானில் அமெரிக்காவின் அபின் ஒழிப்பு முயற்சி தோல்வி

உலகிலேயே அதிக அளவினான அபின் (Opium) ஆப்கானிஸ்தானில்தான் உற்பத்தி செய்யப்படுகிறது. அதை உற்பத்தி செய்வதற்கான மூலப்பொருளாக அங்கு பயிரிடப்படும் பொப்பி (Poppy) என்ற செடி பயன்படுத்தப்படுகிறது. இந்த அபின் உற்பத்தியை கட்டுப்படுத்துவதற்காக அங்கு தலிபான்களுக்கு எதிராகப் போரிடும் கூட்டுப் படைகளுக்குத் தலைமைதாங்கும் அமெரிக்கா, இதுவரை 7.6 பில்லியன் (Billion) டொலர்களை செலவிட்டுள்ளது. ஆனாலும் அங்கு 2013இல் பொப்பி செய்கை 516,000 ஏக்கர்களாக அதிகரித்துள்ளது.




2014இல் ஆப்கானிஸ்தானில் இருந்து பெரும்பாலான அந்நியப் படைகள் வெளியேறவிருக்கும் சூழலில், அங்கு அபின் செய்கை மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தகவல்: Time சஞ்சிகை

## சோவியத் நகைச்சுவை

சோவியத் யூனியனில் ஸ்டாலினுக்குப் பின்னர் குருசேவ் ஆட்சிக்கு வந்தார். அவர் படிப்படியாக சோவியத் யூனியனை சோசலிசப் பாதையிலிருந்து முதலாளித்துவப் பாதைக்கு மாற்றத் தொடங்கினார். அதன் இறுதிக் கட்டப் பூர்த்தியே 1990இல் சோவியத் யூனியன் தகர்ந்து போன சம்பவம்.

குருசேவுக்கு சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் மத்தியிலும், சோவியத் மக்கள் மத்தியிலும் கடும் எதிர்ப்பு இருந்தது. அந்த எதிர்ப்பை சித்தரிக்கும் நகைச்சுவை ஒன்று அந்தக் காலத்தில் உலகம் முழுவதும் வலம் வந்தது. அது இதுதான்:

மொஸ்கோவிலுள்ள அரச தலைமைக் காரியாலயமான கிரெம்லின் மாளிகைக்கு முன்னால் நின்று அரச ஊழியர் ஒருவர், “குருசேவ் ஒரு முட்டாள்” எனக் கோசமெழுப்பினார். விரைந்து வந்த சோவியத் பொலிசார் அவரைக் கைது செய்து அவர் மீது வழக்குத் தொடுத்தனர்.

அவரது வழக்கை விசாரித்த நீதிபதி அவருக்கு 23 வருடங்கள் கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார். தீர்ப்பை விவரித்த நீதிபதி, “நாட்டின் தலைவரை அவமரியாதை செய்ததிற்காக 3 வருடங்களும், ஒரு அரசாங்க இரகசியத்தை வெளியிட்டதற்காக 20 வருடங்களும்” எனத் தனது தீர்ப்பில் தெரிவித்திருந்தார்!

## மொழித் தூய்மை

தமிழ் மொழித் தூய்மை பற்றி இன்று பலரும் பேசி வருகின்றனர். அப்படிப் பேசி வருபவர்களில் பலர் தாம் பேசுகின்ற தமிழில் பல வேற்று மொழி சொற்கள் கலந்திருப்பது அவர்களுக்கே தெரிவதில்லை.

உதாரணமாக, நாம் அடிக்கடி பயன்படுத்தும் ‘ஆஜர்’ என்ற சொல் ஒரு உருதுச் சொல். தமிழகத்தை இஸ்லாமிய மன்னர்கள் ஆட்சி செய்த காலத்தில் இந்தச் சொல் தமிழ் மொழிக்குள் புகுந்து கொண்டது. அதேபோல, இலங்கைத் தமிழர்களும் சிங்களவர்களும் நாளாந்தம் பயன்படுத்தும் பல சொற்கள் போர்த்துக்கீச, ஒல்லாந்துச் சொற்கள். இலங்கையை போர்த்துக்கீசரும், ஒல்லாந்தரும் ஆட்சி செய்த காலத்தில் அவாகளத் சொற்கள் தமிழ் – சிங்கள மொழிகளில் கலந்துவிட்டன.

இதேவேளையில், தமிழகத்தில் இருந்து பல்லாயிரக்கணக்கான மைல்கள் தூரத்தில் இருக்கும் ஆப்கானிஸ்தான் நாட்டின் ஒரு பகுதியில் பேசப்படும் பிருஹி (Brahui) என்ற மொழி ஒரு திராவிட மொழி!

## மாயையை விளக்கும் குட்டிக் கதை

நாம் தொட்டுப் பார்க்கின்ற, முகர்ந்து அறிகிற, கண்ணால் காண்கின்ற பொருள்களெல்லாம் உண்மையல்ல. இவை நமது புலனுணர்வுக்கு வெளியே நிலை கொண்டிருப்பதல்ல. நம்முடைய புலனுணர்வுகள், அக உணர்வுகள், கருத்துக்கள் இவற்றின் இணைப்புக்களே பொருள்களாக நமக்குத் தெரிகின்றன.. புற உலகு உண்மையல்ல. நமது மனத்தின் படைப்பே என்பது இதன் பொருள்.

இதுபோன்றதொரு தத்துவம் சங்கரருடையது. பிரம்மம் தவிர எதுவும் உண்மையல்ல. பிரம்மத்தின் படைப்பான மாயையே உலகமாகிய உருவத்

தோற்றத்தைப் படைக்கிறது. அது கனவு போலப் பொய்யானது. இத்தத்துவத்தைப் பற்றி ஒரு கதையுள்ளது.

ஒரு அத்துவிதப் பிரசங்கி தமது கொள்கையைப் பல உதாரணங்களோடு பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். ஒரு யானைப்பாகன், யானை உண்மையென நம்புகிறவன். அவன், இவர் சொல்லுவது சரிதானா என்று பார்க்க யானையைக் கூட்டத்தினுள் அவிழ்த்துவிட்டான். யானை கூட்டத்தினுள்ளே வந்தது. எல்லோருக்கும் முன் அத்துவிதப் பிரசங்கியார் ஓடிப்போனார். பாகன் அவரிடம், 'யானை மாயையின் படைப்புத்தானே, உண்மையல்லவே, ஏன் ஓடுகிறீர்கள்?' என்று கேட்டான். அவர், 'நான் ஓடுவதும் மாயைதான்' என்று பதிலளித்தார். இது அத்துவிதத்தை எதிர்க்கும் வைஸ்ணவ சித்தாந்திகள் சொல்லுகின்ற வேடிக்கை கதை.

(பேராசிரியர் நா.வானமாமலை எழுதிய 'இந்திய தத்துவ மரபும் மார்க்சிய இயக்கவியலும்' என்ற நூலிலிருந்து)

## இந்திய சுதந்திரத்தில் ஏமாற்றம் கொண்ட காந்தி!

1947 ஒகஸ்ட் 15இல் இந்தியா - பாகிஸ்தான் என்ற இரு நாடுகளின் உருவாக்கம் பிரகடனப்படுத்தப்பட்டது. அதன்பின்னர் நடந்த இந்து - முஸ்லீம் கலவரத்தில் 5 இலட்சம் மக்கள் கொல்லப்பட்டனர்!

காந்தி சுதந்திர தின விழாவில் பங்கேற்கவில்லை. காந்தியும், கம்யூனிஸ்ட்டுகளும் மட்டுமே இந்தக் கலவரத்துக்கு எதிராக ஒன்றிணைந்து நின்றனர்.

காந்தி கோட்ஸே என்பவனால் சுட்டுக் கொல்லப்படுவதற்கு நான்கு நாட்கள் முன்பு - அதாவது 1948 ஜனவரி 28ஆம் திகதி பின்வருமாறு கூறியிருக்கிறார்:

"இப்பொழுது நாம் சுதந்திரத்தைப் பெற்றுக் கையாண்டு விட்டோம்.ஏமாற்றம் கொண்டுவிட்டோம். உங்களுக்கு எப்படியோ, குறைந்தபட்சம் எனக்கு ஏமாற்றமே".

## ஹிட்லரும் உக்ரைன் மீது ஆசை கொண்டான்!

உக்ரேன் பிரச்சினை பற்றி அறியும் இன்றைய தலைமுறையினர், மேற்கத்தைய ஊடகங்களின் தீவிர பிரச்சாரம் காரணமாக, ரஸ்யா தான் உக்ரைனை வலிந்து ஆக்கிரமித்துள்ளது என்பது போன்ற கருத்துக்கு வந்திருப்பர். ஆனால் உண்மை அதுவல்ல. 1935 யூலை 25 முதல் ஒகஸ்ட் 21 வரை மொஸ்கோவில் கூடிய கம்யூனிஸ்ட் அகிலத்தின் ஏழாவது மாநாட்டின் பின்வரும் தீர்மானத்தை வாசித்துப் பார்த்தால் உக்ரேன் யாருக்கு சொந்தமாக இருந்தது என்பது தெரிய வரும். தீர்மானம் வருமாறு:

"ஜெர்மன் பாசிஸ்ட்டுகளின் அதிரடித் திட்டங்கள் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடியவை. அது பிரான்சைப் பழிவாங்க விரும்புகிறது. செக்கோஸ்சிலோவாக்கியாவை சிதறடிக்க விரும்புகிறது. ஆஸ்திரியாவைத் தன்னுடன் இணைத்துக்கொள்ளத் திட்டமிடுகிறது. பால்டிக் நாடுகளின் சுதந்திரத்தினை அழித்திட ஆசைப்படுகிறது. அந்த நாடுகளை சோவியத் நாட்டுக்கு எதிரான படைத்தளமாக மாற்ற நினைக்கிறது. **சோவியத் நாட்டிலிருந்து சோவியத் உக்ரைனை கைப்பற்றக் கனவு காண்கிறது.** (அழுத்தம் எம்முடையது - வானவில்) ஐரோப்பியக் கண்டத்தில் பிரான்சின் செல்வாக்கினைக் குறைக்க வேண்டும் என்பதற்காகவும், சோவியத் நாட்டினை ஜெர்மனி தாக்க வேண்டும் என்பதற்காகவும், பிரிட்டிஸ் முதலாளிகளில் பெரும்பாலோர் ஜெர்மனியின் படைப்பெருக்கத்தையும், இராணுவத் தயாரிப்புகளையும் ஆதரிக்கிறார்கள். பிரிட்டிஸ் ஏகாதிபத்தியத்தின் இந்தக் கொள்கை மற்றொரு உலக ஏகாதிபத்திய யுத்தம் வெடிப்பதற்கான காரணங்களில் ஒன்றாக உள்ளது."

அதாவது இன்றைய உலக ஏகாதிபத்திய சக்திகள் மட்டுமின்றி, அன்று உலகைக் கபளீகரம் செய்யப் புறப்பட்ட ஹிட்லரும் கூட உக்ரேனைக் கைப்பற்ற முயன்றிருக்கிறான் என்பதை இந்தத் தீர்மானம் எடுத்துக் காட்டுகிறது. அதுமட்டுமின்றி, அன்று இரண்டாவது உலக யுத்தம் என்ன காரணிகளால் உருவாகப் போகிறது என்பதை கம்யூனிஸ்ட் அகிலம் மிகத் தெளிவாக சுட்டிக் காட்டியிருக்கிறது. இன்றைய ஏகாதிபத்திய சக்திகளின் செயற்பாடும் மூன்றாம் உலக யுத்தம் ஒன்றை நோக்கித் தள்ளிச் செல்கின்றன என்பதை, அன்றைய நிலைமையுடன் சமாந்திரமாக இணைத்துப் பார்க்கலாம்.

## தமிழ் ஆட்சிமொழியாக உள்ள நாடுகள்

உலகில் நான்கு நாடுகளில் தமிழ் ஆட்சி மொழியாக உள்ளது. அவையாவன: இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, மொரீசியஸ்.
தகவல்: மங்கையர் மலர்

குறிப்பு: இதில் 7 கோடித் தமிழர்களும், அவர்களது தானைத் தலைவர்களும் வாழும் இந்தியா இல்லை என்பது கவனத்திற்குரியது.

## நெப்போலியனின் தொப்பி ஏலத்தில்

நெப்போலியன் பொனபாட் பயன்படுத்திய புகழ்பெற்ற தொப்பிகளில் ஒன்று பிரான்ஸ் தலைநகர் பாரிஸ்க்கு அருகே உள்ள ஃபோன்தேம்பில நகரில் ஏலம் விடப்படுகின்றது. இரண்டு பக்கங்கள் கூரான இந்தத் தொப்பி, 1800-ம் ஆண்டு மரேங்கோ போரின்போது நெப்போலியன் அணிந்திருந்தது. இப்போது மொனாக்கோ அரச குடும்பத்துக்குச் சொந்தமான பொருட்களில் இதுவும் உள்ளது. இது ஐந்து லட்சம் யூரோவுக்கு ஏலம் போகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நெப்போலியனைக் கொல்ல விரும்பிய ஜெர்மனிய மாணவன் வைத்திருந்த கத்தி ஒன்றும், ஒருகாலத்தில் போர்க்கொடியின் உச்சத்தில் வைக்கப்பட்டிருந்த குண்டடிபட்ட துளையுடன் கூடிய வெண்கல கழுகு ஒன்றும் ஏலத்துக்கு வந்திருக்கின்றன.

www.padippakam.com

# பண்டாரநாயக்க தம்பதிகளின் அரசியலும் அவர்களது பிள்ளைகளின் அரசியலும்

இலங்கை மக்களைப் பொறுத்தவரையில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க அவர்களின் பெயர் என்றென்றும் மறக்க முடியாத ஒன்று. அதேபோல சிறீலங்கா சுதந்திரக் கட்சியினரைப் பொறுத்தவரையிலும் கூட அவர் நாமம் மறக்க முடியாத ஒன்று. அதற்கான காரணங்கள் பல என்ற போதிலும் முக்கியமான காரணங்கள் இரண்டு எனலாம்.

ஒன்று, அவர் ஆரம்பத்தில் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்தபோதும், அக்கட்சி பின்பற்றிய ஏகாதிபத்திய சார்புக் கொள்கைக்கு எதிராக தேசப்பற்றுள்ளவராக இருந்தார். அதன்காரணமாக சுதந்திர இலங்கையின் முதலாவது அரசாங்கமான ஐ.தே.கவின் டி.எஸ்.சேனநாயக்க அமைச்சரவையில் தான் வகித்து வந்த சுகாதார அமைச்சர் பதவியைத் துறந்துவிட்டு இலங்கை மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியை 1951இல் நிறுவினார்.



பண்டாரநாயக்க – சிறீமாவோ

இரண்டாவது, அவரது கட்சி மிகக்குறுகிய காலத்தில் அதாவது 1956 பொதுத்தேர்தலில் அமோக வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றியது. ஆனால் அவரது அரசியல் பயணத்தைத் தொடரவிடாது பிற்போக்கு சக்திகள் அவரை 1959 செப்ரெம்பரில் சுட்டுப் படுகொலை செய்தன. இருந்த போதும் குறுகிய காலமான 3 வருடங்களில் பண்டாரநாயக்க, நாட்டை கணிசமான அளவு ஏகாதிபத்தியப் பிடியிலிருந்தும், நிலப்பிரபுத்துவப் பிடியிலிருந்தும் விடுவிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

அதேபோல, அவரது மரணத்துக்குப் பின்னர் கட்சியினதும் நாட்டினதும் பொறுப்பை ஏற்ற அவரது மனைவி சிறீமாவோ அம்மையாரும் நடந்து கொண்டார். சிறீமாவோ ஒரு பெண்ணாக இருந்ததுடன், தனது கணவர் பண்டாரநாயக்க போன்று இங்கிலாந்து சென்று கல்வி கற்றவராக இல்லாதபோதும், துணிகரமாக கட்சியினதும் நாட்டினதும் தலைமைப் பொறுப்பை ஏற்று உலகின் முதல் பெண் பிரதமர் என்ற பெருமையையும் பெற்றுக் கொண்டார்.

அதைவிட முக்கியமானது, வெறுமனே பதவி ஆசைக்காக அவர் நாட்டின் தலைமைப் பதவியைப் பெற்றுக் கொண்டவராக இல்லாது, தனது கணவர் ஆரம்பித்து வைத்த ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் பணியை துணிகரமாகவும், இடைவெளி இன்றியும் தொடர்ந்து முன்னெடுத்துச் சென்றார். அதனால்தான் பிற்போக்கு சக்திகள் 1962இல் ஒரு இராணுவச் சதியின் மூலம் அவரது அரசைக் கவிழ்க்க முயன்றனர். ஆனால் தோற்றுப் போயினர்.

ஆனால் பிற்போக்கு சக்திகள் தொடர்ந்தும் முயன்று 1964இல் அவரது அரசு கொண்டு வந்த லேக் ஹவுஸ் பத்திரிகை நிறுவனத்தைத் தேசியமயமாக்கும் மசோதாவில் அவரது அரசைத் தோற்கடித்து வெற்றி பெற்று விட்டனர். இருப்பினும் அவர் அரசியலை விட்டு ஒதுங்காது பிற்போக்கு சக்திகளுக்குத் தலைமைதாங்கிய ஐ.தே.கவுக்கு எதிரான போராட்டத்தைச் சளைக்காது முன்னெடுத்துச் சென்றார். அதன்காரணமாக 1970இல் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்று ஆட்சியைக் கைப்பற்றினார்.

1970இல் அவர் ஆட்சிக்கு வந்த வேளையில் சர்வதேச ரீதியாக எண்ணெய் மற்றும் உணவு பொருட்களில் ஏற்பட்ட விலையுயர்வும், தட்டுப்பாடும் அவரது அரசைக் கடுமையாகப் பாதித்து மக்களிடமிருந்து அவரது அரசைத் தனிமைப்படுத்தியது. அந்த நிலைமையை நன்கு பயன்படுத்திய ஐ.தே.க (இன்று மைத்திரி - ரணில் - சந்திரிகா கூட்டும் அதைத்தான் செய்கிறது), பொய்ப் பிரச்சாரங்களைச் செய்து, பொய் வாக்குறுதிகளை வழங்கி ஆட்சியைக் கைப்பற்றியது. ஆனால் பின்னர் 17 வருடங்களாக ஐ.தே.க எப்படி நாட்டைச் சீரழித்தது என்பதை விவரிப்பது இந்தக் கட்டுரையின் நோக்கமல்ல.

1977 வெற்றி பெற்ற ஐ.தே.கவுக்குத் தலைமைதாங்கிய கேடுகெட்ட ஏகாதிபத்திய பாதந்தாங்கியான ஜே.ஆர்.ஜெயவர்த்தன, தனது அரசுக்கு எவ்விதமான எதிர்ப்பையும் இல்லாமல் செய்வதற்காகவும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியை ஒழித்துக் கட்டுவதற்காகவும், சிறீமாவோ பண்டாரநாயக்க தனது அரசுடன் இணைந்தால் அவருக்கு வெளிநாட்டமைச்சர் பதவி தருவதாக ஆசை வார்த்தை காட்டிப் பார்த்தார். ஜே.ஆர். என்ற அரசியல் குள்ளநரியின் சூழ்ச்சியில் சிறீமாவோ சிக்கவில்லை. அதன் பின்னரே ஜே.ஆர். தனது தந்திரத்தை மாற்றிக் கொண்டு, சிறீமாவோ மீது கொண்ட கோபத்தால் அவரது குடியியல் உரிமையைப்


படிப்பகம்

www.padippakam.com

பறித்து அதன் மூலம் அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் பறித்தார்.

இருந்தும் சிறீமாவோவை அரசியலில் இருந்து ஜே.ஆரால் ஒழித்துக்கட்ட முடியவில்லை. அவர் மீண்டும் முன்னையை விட அதிக பலத்துடன் அரசியலில் எழுச்சி பெற்றது வரலாறு.

இதிலிருந்து ஒரு விடயம் தெளிவாகிறது. பண்டாரநாயக்கவும் சரி, அவருக்குப் பின்னர் அவரது மனைவி சிறீமாவோவும் சரி, என்ன நெருக்கடிகள் வந்தபோதும் தமது ஏகாதிபத்திய எதிர்ப்பையோ அல்லது ஏகாதிபத்திய அடிவருடிக் கட்சியான ஐ.தே.கவுக்கான எதிர்ப்பையோ ஒருபோதும் கைவிடவில்லை.

ஆனால் அவர்களது பிள்ளைகளின் அரசியல் வரலாறோ அவர்கள் வகுத்த அரசியல் பாதையிலிருந்து தலைகீழாகச் சென்று முடிந்திருக்கிறது.

சிறீமாவோவுக்குப் பின்னர் பண்டாரநாயக்க குடும்பத்தின் அரசியல் வாரிசாக வர வேண்டிய அவரது மகன் அனுர பண்டாரநாயக்க, தனது தந்தையினதும் தாயினதும் பரம அரசியல் வைரியான ஐ.தே.கவில் சேர்ந்து தமது குடும்ப அரசியல் கௌரவத்தை மட்டுமின்றி, தனது வாழ்வையும் அழித்துக் கொண்டார். அவரது தவறான போக்கே தாயார் சிறீமாவோவின் மரணத்துக்கு காரணமாக அமைந்தது என்ற அபிப்பிராயமும் அரசியல் வட்டாரங்களில் உண்டு. (2000 ஆண்டுப் பொதுத்தேர்தலில் அனுர ஐ.தே.கவில் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட்டார். இது சிறீமாவோவுக்கு ஒரு தர்ம சங்கடமான நிலையைத் தோற்றுவித்தது. அவர் ஐ.தே.கவுக்கு எதிரி என்றாலும் மகன் அக்கட்சியில் போட்டியிடுவதால், மகனில் அமோக பற்றுதல் கொண்ட அவர் மகனுக்குத்தான் வாக்களிக்க வேண்டும். எனவே தான் செய்யக்கூடாத வேலையைச் செய்ய வேண்டிய, அதாவது ஐ.தே.கவின் யானைச் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. தனது மனச்சாட்சிக்கு எதிராக வாக்களித்ததாலோ என்னவோ, அவர் தனது தொகுதியான அத்தனைகலவுக்குச் சென்று வாக்களித்துவிட்டு திரும்பி வரும் வழியில் அவர் உயிர் பிரிந்துவிட்டது)

அனுர சென்ற பாதையிலேயே இப்பொழுது பண்டாரநாயக்க தம்பதிகளின் மகளான சந்திரிகாவும் செல்லத் தொடங்கியுள்ளார். தனது காலஞ்சென்ற கணவர் விஜயகுமாரதுங்கவுடன் சேர்ந்து சிறீலங்கா மக்கள் கட்சி என்ற ஒரு கட்சியை ஆரம்பித்த சந்திரிகாவை, அவரது கணவரை ஜே.வி.பியினர் சுட்டுப் படுகொலை செய்த பின்னர், தாயார் சிறீமாவோ திரும்பவும் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குக் கொண்டு வந்து நாட்டின் ஜனாதிபதி என்ற உயர் பதவியையும் பெற்றுக் கொடுத்தார். ஆனால் அதையெல்லாம் மறந்த சந்திரிகா, இன்று தனது குடும்ப வாரிசுகளுக்கு அரசியல் அந்தஸ்து பெற்றுக் கொடுப்பதற்காக தமது குடும்பத்தின் அரசியல் எதிரியான ஐ.தே.கவுடன் சந்தர்ப்பவாத ரீதியில் கரம் கோர்த்துள்ளார். பண்டாரநாயக்கவும் அவரது மனைவி சிறீமாவோவும் தொடக்கி வைத்த ஏகாதிபத்திய எதிர்ப்பு, ஐ.தே.க எதிர்ப்பு என்ற அரசியல் மரபை எப்பொழுது அவர்களுடைய பிள்ளைகள் கைவிட்டார்களோ, அப்பொழுதே அவர்கள் பண்டாரநாயக்க குடும்பத்தின் அரசியல் வாரிசுகள் என்ற தகுதியையும் இழந்துவிட்டார்கள். எனவே சந்திரிகாவின் தற்போதைய சந்தர்ப்பவாத அரசியல் பயணம் தொடர்ந்து செல்லுமா என்பது சந்தேகத்துக்கு உரிய ஒன்றாகவே இருக்கின்றது.

– **புனிதன்**

"விமர்சன ஆயுதம் என்பது ஆயுதத்தால் செய்யப்படும் விமர்சனத்தை மாற்றிவிட முடியாது என்பது நிச்சயம். பொருளாயத சக்தி என்பது பொருளாயத சக்தியினாலேயே வீழ்த்தப்பட வேண்டும். ஆனால் ஒரு போதனை கூட பொதுமக்களைப் பற்றிக் கொண்டவுடன் ஒரு பொருளாயத சக்தியாக மாறிவிடுகிறது"

**- மார்க்ஸ்**

# எண்ணெய் விலை குறைப்பின் பின்னணியில் நிகழ்ச்சி நிரல் ஏதாவது உள்ளதா?




"இரண்டும் இரண்டும் நான்கு" என்று சொல்வதைவிட, "இரண்டும் இரண்டும் ஒன்று" என்று சொல்வதில் ஏதாவது இலாபம் இருக்குமானால் முதலாளித்துவம் அப்படியும் சொல்லத் தயங்காது என்று கார்ல் மார்க்ஸ் ஒருமுறை சொன்னதாக ஒரு தகவல் உண்டு.

இப்பொழுது உலகச் சந்தையில் எண்ணெய் விலை சரிவடைந்து செல்வதைப் பார்த்தால் அப்படித்தான் எண்ணத் தோன்றுகிறது. ஏனெனில் முன்னைய காலங்களில் தங்கத்தின் விலை சில வேளைகளில் குறைவடைந்தாலும் எண்ணெயின் விலை ஒருபோதும் குறைவடைந்ததில்லை என்ற உண்மையை வைத்துப் பார்க்கும் போது இப்படி எண்ணத் தோன்றுகிறது.

உலகின் வறுமைப்பட்ட நாடுகளைச் சுரண்டுவதில் பல்வேறு வழிமுறைகளை வளர்ச்சியடைந்த நாடுகள் கைக்கொண்டாலும், அவர்களின் பிரதான வழிமுறை எண்ணெய் என்ற ஆயுதம்தான். அதனால்தான் எண்ணெய் வளமுள்ள ஈராக், லிபியா போன்ற நாடுகளை அவை ஏற்கெனவே தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதுடன், ஈரான், வெனிசூலா போன்ற நாடுகளிலும் தமக்குச் சார்பான ஆட்சிகளை உருவாக்க முயல்கின்றன.

இப்பொழுது உலக அரங்கில் ஆதிக்கம் செய்யும் சக்திகள் நிஜமான ஆயுதங்களை மட்டுமின்றி, எண்ணெயையும் ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தி வருகின்றன. 1970களில் ஏற்பட்ட எண்ணெய் நெருக்கடியால் மேற்கத்தைய நாடுகள் பெரும் பாதிப்புக்கு உள்ளானபோது, அந்த

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க..

www.padippakam.com

# இந்து மதத்தின் தனித்தன்மைகள்

இந்து மதம் என்பது ஒரு மதம் அல்ல. அது ஒரு வாழ்க்கைமுறை என்று அடிக்கடி கூறப்படுகிறது. ஆனால் அது வேறு ஒரு விளக்கமும் கொடுக்கவில்லை. வாழ்க்கைமுறை என்றால் என்ன என்னும் கேள்வி மட்டும் எழுகிறது.

இந்து மதம் ஒரு மதமில்லை என்று கூறுவது சரியாகாது. அதற்குக் கடவுள் கருத்து இருக்கிறது. அதற்கு வழிபாடுமுறை, சடங்கு சாத்திரங்கள் இருக்கின்றன. அதற்கு மதகுருமார்கள் இருக்கிறார்கள். அவர்கள் மதச்சடங்குகளைச் செய்கிறார்கள். எனவே அதற்கு ஒரு மதத்திற்கு வேண்டிய எல்லா சேர்மானக் கூறுகளும் இருக்கின்றன.

இந்து மதத்தின் மற்றொரு தனிக்கூறு நாடு முழுவதற்கும் அது ஒரு பொதுவான கலாச்சாரத்தை உண்டாக்கியிருக்கிறது என்பதாகும். ஆனால் அது இந்து மதத்திற்கு மட்டும் உள்ள தனித்தன்மையல்ல. பண்டைய காலத்திலும் மத்திய காலத்திலும் உலகம் முழுவதிலும் மதம் மனித சமுதாயம் முழுவதையும் ஒன்றிணைக்கும் ஒரு சித்தாந்த சக்தியாக இருந்த போது கிறிஸ்தவ மதம், இஸ்லாமிய மதம், புத்த மதம் முதலிய அனைத்தும் அந்தந்த மதங்களைத் தழுவிய மக்கள் அனைவருக்கும் ஒரு பொதுவான கலாச்சாரத்தை உண்டாக்கியிருக்கிறது.

இந்து மதத்தின் சில தனித்தன்மைகளைக் காட்ட வேண்டுமானால் அதில் இதர மதங்களிலிருந்து வேறுபட்டு நிற்கும் அம்சங்களைத் தனியாகப் பிரித்துக் காட்ட வேண்டும்.

கிறிஸ்தவ மதம், இஸ்லாம், புத்தம் ஆகிய மதங்களுக்கு உள்ளதைப் போல இந்து மதத்திற்கு ஒரு ஸ்தாபகர் என்று யாரும் இல்லை. ஒரே தனியான மத வேதப் புத்தகம் இல்லை. கிறிஸ்து, முகமது, புத்தர் என யாரும் இல்லை. பைபிள், குரான், தம்மபதம் என எதுவும் இல்லை.

இந்து மதத்திற்கு ஒரு தனியான தீர்க்கதரிசி என்று யாரும் இல்லை. ரிசிகள், முனிவர்கள், ஞானிகள், அவதார புருசர்கள், வரலாற்றில் அங்கீகரிக்கப்பட்ட சங்கரர் போன்ற துறவிகள் பலரும் மதத்தில் அங்கீகரிக்கப்பட்டவர்கள். பண்டைய வேதங்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்களைப் போலவே பின்னர் வந்துள்ள ஸ்மிருதிகள், கீதை, மகாபாரதம் மற்றும் புராணங்கள், இதிகாசங்கள் முதலியவற்றில் வந்துள்ள கருத்துக்களும் இந்து மதத்தின் அதிகாரபூர்வமான கருத்துக்களாகும்.



இந்து மதத்தின் மற்றொரு தனித்தன்மை அதற்குத் தனிப் பிறப்பில்லை அதற்கு வளர்ச்சி மட்டுமேயுண்டு. இந்து, இந்து மதம் என்னும் வார்த்தைகள் கூட எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுகளில் இந்த நாட்டின் மீது படையெடுத்த முஸ்லிம் படையெடுப்பாளர்களால் உண்டாக்கப்பட்ட வார்த்தைகளாகும். ரிக் வேதத்திலிருந்து சங்கரர் காலம் வரையிலும் 2500 ஆண்டு காலமாக எந்த நூலிலும் பழக்கத்திலும் இந்தப் பெயர்கள் காணப்படவில்லை.

இந்து மதம் எப்படியோ வளர்ந்திருப்பதைப் போலவே வேத காலத்து இந்து மதம் பின்னர் வந்த பிரமாணங்கள், உபநிடதங்கள் காலத்திய இந்து மதத்திலிருந்து வேறுபட்டதாகும்.... இருப்பினும் வேதகால மதத்திற்கும் இன்றைய இந்து மதத்திற்கும் ஒரு தொடர்ச்சி இருக்கிறது என்பதும் உண்மையாகும். சதுவர்ணம் என்பது பின்னர் இப்போதைய சாதி அமைப்பு முறையாக உறுதிப்படுத்தப்பட்டது. இது வேத காலத்திலிருந்து தொடர்கிறது. மேலும் இப்போது விக்கிரக ஆராதனைதான் இந்த வழிபாட்டின் பிரதான அம்சமாக இருந்த போதிலும் யக்ஞம் போன்றவைகளையும் மறந்துவிடவில்லை.

இருப்பினும் சில தெளிவான மாற்றங்களை இங்கு நாம் குறிப்பிட்டாக வேண்டும்.

ரிக் வேத மதத்தின் மையமான செயல் யக்ஞம், நெருப்புவளர்த்தல், பலியிடுதல். உண்மையில் ரிக் வேத சடங்குகள், மந்திரங்கள் ஆகியவை மதமே அல்ல. ரிக் வேதத்திற்கு எல்லாம் வல்ல இறைவன், கடவுள் உலகைப் படைத்தவன், உலகை ஆள்பவன் எதுவும் இல்லை. அதற்கு வழிபாடு இல்லை. தொழுதல் இல்லை. ஏழை எளியவர்கள் தங்களைக் காப்பாற்ற வரம் கேட்பது இல்லை. கடவுளை வேண்டுதல் இல்லை.

ரிக் வேதத்தில் ஆத்மா இல்லை. பிரம்மா இல்லை. மோட்சம் இல்லை. விக்கிரக பூசை இல்லை.

இன்னும் வேடிக்கை என்னவென்னவெனில் ரிக்வேத காலத்து ரிசிகள் மாட்டிறைச்சி சாப்பிட்டார்கள். அதை விருந்திற்குப் பரிமாறினார்கள். பசுவைக் கொல்வதில் சாப்பிடுவதில் எந்தப் பாவமும் இருப்பதாக அவர்கள் கருதவுமில்லை. அதைக் குற்றம் எனக் கூறவுமில்லை.

பூர்வ மிமாம்சவாதிகளுக்கும் (வேத காலத்து யக்ஞ முறைகளை நியாயப்படுத்தியவர்கள்) உத்தர மிமாம்சவாதிகளுக்கும் அதாவது உபநிடதங்களை நியாயப்படுத்தும் மந்திரவாத எண்ண முதல்வாதமான வேதாந்தத்தை நியாயப் படுத்துபவர்களுக்குமிடையில் பல நூற்றாண்டுகள் சரியான தத்துவார்த்தச் சண்டை நடைபெற்றது.

வேதாந்தத்துடன் சேர்ந்து மறுபிறவி,


படிப்பகம்

www.padippakam.com

கர்மம் பற்றிய தத்துவங்களும் வந்தன.

அதன்பின்னர் உபநிடதத் தத்துவங்களையும் மதத்தையும் எதிர்த்து புத்த மதம் சவால்விட்டது. எல்லா முனைகளிலும் அதை எதிர்த்தது. ஆனால் அந்த புத்த மதமும் சீரழிந்துவிட்டதால் அதை முறியடித்து "புதிய" இந்து மதம் வந்தது.

அதுதான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி ஸ்மிருதியும், கீதையும், மகாபாரதமும், புராணங்களும் எடுத்துக் கூறும் இந்து மதமாகும்.

இப்போது ஒரு கடவுள் வந்துவிட்டார். அது அவதாரம், மகாவிஸ்ணுவின் அவதாரம், அதாவது கிருஸ்ண பரமாத்மா வந்துவிட்டார். அத்துடன் கீதையில் குறிப்பிடப்பட்டுள்ள பக்தியும் வந்துவிட்டது.

இந்து மதம் தானாக வளர்ந்தது. எனவே அதில் மற்றொரு தனியான பண்புக் கூறு உள்ளது. உலகில் இதர மதங்களை ஒப்பிடும் போது இந்து மதம் எந்தவிதமான அமைப்பு முறையும் இன்றித் தானாகவே சுயேச்சையாக இயங்குவதாகும்.... இந்து மதம் என்னும் இந்தக் கடிகாரம் எவ்வாறு சாவி கொடுக்காமல் ஓடுகிறது. ரெகுலேட்டர் இல்லாமல் ஒழுங்குபடுத்தப்படுகிறது. மெக்கானிக் இல்லாமல் அவ்வப்போது பழுதுபார்க்கப்படுகிறது.

அதுதான் முக்கியமான பிரச்சினை. இந்தக் கேள்விக்குப் பதில் கிடைத்துவிட்டால் இந்த அதிசயமான "வாழ்க்கைமுறை"யின் புதிர்களைப் புரிந்து கொள்ளலாம்.

மதம் என்பது ஒரு மேல்கட்டுமானமாகும். அந்த வகையில் அது மனிதனுக்கும் கடவுளுக்கும் இடையில் உள்ள உறவைப் பற்றிப் பேசுகிறது. ஆனால் மேல்கட்டுமானத்திற்குப் பொருளாயத வேர்கள் இருக்கின்றன. அது அதனுடைய பொருளாயத அஸ்திவாரத்தைப் பலப்படுத்தத் தவறினால் அது மேல்கட்டுமானமாக நிலைக்காது.

இந்த நிலையிலிருந்து பார்த்தால் இந்து மதத்தின் வரலாற்றுச் சாதனை என்ன?

இதன் தொடர்பாக நாம் முதலில் கவனத்தில் கொள்ளும் முதல் விடயம் இதர மூன்று மதங்களைப் போல் அல்லாமல் இந்து மதம் தொடக்க காலத்திலிருந்தே சுரண்டல்கார, ஆதிக்கம் செலுத்துகின்ற, அடக்கி ஒடுக்குகின்ற வர்க்கங்களின் மதமாகவே இருந்து வந்திருக்கிறது.

கிறிஸ்தவ மதத்தின் தோற்றம் ரோமாபுரியில் இருந்த அடிமைகளின் துன்ப துயரங்களிலிருந்தும் விடுதலைக்காக அவர்கள் ஏங்கித் தவித்த ஏக்கத்திலிருந்தும் வந்தது. புத்த மதத்தின் மூலவேர் கீழ்த்தட்டில் அடக்கி ஒடுக்கப்பட்டிருந்த சாதியினருக்காக புத்தர் இரக்கப்பட்டு அவர்களுடைய துன்ப துயரங்களைப் போக்குவதற்காக அவர் காட்டிய ஆர்வத்திலும் அடங்கியிருக்கிறது. போட்டி போட்டு போரிட்டுக் கொண்டிருந்த இனக்குழுக் கூட்டத்திற்கு ஒற்றுமையை உண்டாக்கும் இயக்கமாக இஸ்லாம் தோன்றியது.

இந்து மதத்தின மூலாதாரம் என்ன? சதுர்வர்ண வடிவத்தில் வைசியர்கள் சூத்திரர்கள் மீது "ஆரிய" சத்திரிய பிராமண ஆதிக்கம் ஏற்பட்டதாகும்.

காலப்போக்கில் ஒவ்வொரு மதமும் சுரண்டும் வர்க்கங்களின் கருவியாகிறது. மக்களுக்கு அபினியாகிறது. ஆனால் இந்து மதத்தின் தனிக்கூறுகளைப் பற்றிப் படிப்பாராய்ச்சி செய்ய வேண்டுமானால் அப்போது இந்து மதம் ஆரம்ப காலத்திலிருந்தே சுரண்டும் வர்க்கத்தின் கருவியாக இருந்தது என்பதைப் புறக்கணித்துவிட முடியாது.

எனவே சதுர்வர்ண அமைப்பு முறையின் வளர்ச்சி ஒரு மத நிறுவனமாக மட்டுமல்லாது தெளிவான முறையில் சுரண்டல் அமைப்பின் ஒரு சமூகப் பொருளாதார அமைப்பு முறையாகவும் இருந்தது. இதுதான் இந்து மதத்தின் வரலாற்றுப் பங்களிப்பாகும்.

**இந்தக் கட்டுரை எஸ்.ஜி.சர்தேசாய், திலிப் போஸ் இருவரும் சேர்ந்து எழுதிய "மார்க்ஸிசமும் பகவத் கீதையும்" என்ற நூலிலிருந்து (என்.சி.பி.எச் வெளியீடு) எடுக்கப்பட்ட ஒரு பகுதியாகும். ஆசிரியர்களுக்கும், வெளியீட்டாளர்களுக்கும் எமது நன்றி – வானவில்)**

# தோழர் வி.இரட்டாய் மறைவுக்கு அஞ்சலி

*காரைநகர் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியர் தோழர் வைரமுத்து இரட்டாய் 2015 தை 11ஆம் திகதி காலமாகிவிட்டார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

*இளமைப் பருவத்திலிருந்தே கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்து வேலை செய்த தோழர் இரட்டாய், கட்சியின் தலைமையில் தீண்டாமைக்கு எதிராகவும் சாதி அமைப்புக்கு எதிராகவும் நடைபெற்ற சகல போராட்டங்களிலும் தன்னை இணைத்துக் கொண்ட ஒருவராவார்.*

*1977இல் தமிழர் விடுதலைக் கூட்டணி 'தமிழ் ஈழ' கோரிக்கையை முன்வைத்து போட்டியிட்ட பொதுத்தேர்தலில் தோழர் ரட்டாய் அதை எதிர்த்து வட்டுக்கோட்டைத் தொகுதியில் போட்டியிட்டு கணிசமான வாக்குகளைப் பெற்று, ஏழு பேர் போட்டியிட்ட அத்தேர்தலில் மூன்றாவது ஸ்தானத்துக்கு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.*

*தோழர் இரட்டாய் அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது சகோதரர்களுக்கும், உறிவினர்களுக்கும் 'வானவில்' தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.*

***-ஆசிரியர் குழு***


படிப்பகம்

www.padippakam.com

முன்பக்கத்தொடர்ச்சி...

சபை தேர்தலை நடாத்திய முறையுடன் ஒப்பிட்டு பார்த்தால், ஐ.தே.க சொல்வதென்ன, நடைமுறையில் செய்வதென்ன என்பதை புரிந்து கொள்ளலாம்.

இந்த தேர்தலில் பிற்போக்கு வலதுசாரி சக்திகளின் வேட்பாளரான மைத்திரிபால சிறிசேனவை வெல்ல வைப்பதற்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள சகல பிற்போக்கு சக்திகளும் கைகோர்த்தன.

உள்நாட்டில் ஐ.தே.க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, தமிழ் தேசிய கூட்டமைப்பு, முஸ்லீம் காங்கிரஸ், சரத் பொன்சேகா, ஜே.வி.பி, இடதுசாரி சந்தர்ப்பவாதிகள், சகலவிதமான அரச சார்பற்ற நிறுவனங்கள் என ஒரு பெரிய பட்டாளம் ஒன்று சேர்ந்ததுடன், தமது வெற்றியை உறுதிப்படுத்த ஆளும் ஐக்கிய சுதந்திர கூட்டமைப்பை சேர்ந்தவரையே தமது வேட்பாளராகவும் நியமித்தனர்.

மறுபக்கத்தில் வெளிநாட்டைப் பொறுத்தவரை, அமெரிக்கா – பிரித்தானியா தலைமையிலான மேற்குலக வல்லாதிக்க சக்திகள், புலம்பெயர் நாடுகளிலுள்ள புலி சார்பு சக்திகள் என்பன ஒன்றிணைந்து எதிரணி வேட்பாளரின் வெற்றிக்கு கடுமையாக உழைத்தன.

ஆனால் உள்நாட்டு – வெளிநாட்டு பிற்போக்கு சக்திகள் கடும் பிரயத்தனம் செய்த போதிலும் மைத்திரிபால சிறிசேன 51 வீதம் மட்டுமே பெற்று அரும்பொட்டான வெற்றியையே ஈட்ட முடிந்தது. அதுவும் வாழ்நாள் முழுவதும் சர்வதேச – உள்நாட்டு பிற்போக்கு சக்திகளுடன் சேர்ந்து அரசியல் செய்வதையே மரபாக பேணி வரும் பிற்போக்கு தமிழ் தலைமையும் (தமிழ் தேசிய கூட்டமைப்பு), சந்தர்ப்பவாதத்தையும், பதவி வெறியையும் மூலதனமாக கொண்டு அரசியல் செய்து வரும் முஸ்லீம் காங்கிரசும் ஆதரவளித்தமையாலேயே மைத்திரிபால வெற்றியீட்ட முடிந்தது.

தேர்தல் வெற்றி சம்பந்தமான வரைபடத்தை எடுத்துப் பார்த்தால், அதில் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்ற இடங்கள் அச்சொட்டாக புலிகள் வெளியிட்ட ‘தமிழ் ஈழ’ வரைபடம் போன்று இருப்பதை அவதானிக்க முடியும்.

அதேவேளையில் சிங்கள மக்களில் பெரும்பாலோர் மகிந்த ராஜபக்சவையே ஆதரித்து வாக்களித்துள்ளனர். அதன் மூலம் அந்நியர் ஆட்சிக் காலத்திலும் சரி, நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் பெரும்பாலான காலங்களிலும் சரி, ஏகாதிபத்தியத்துக்கு எதிராக நின்ற தமது பாரம்பரியத்தை சிங்கள மக்கள் கைவிடாது பாதுகாத்து வருகின்றனர் என்ற உண்மை புலனாகின்றது.

மகிந்த ராஜபக்சவை ஆட்சியை விட்டு அகற்ற வேண்டும் என்ற முடிவை உள்நாட்டு – வெளிநாட்டு சக்திகள் எடுத்ததிற்கு முக்கியமான சில காரணங்கள் உண்டு.

அதில் முதலாவது, அவரது அரசு பின்பற்றிய உலக வல்லாதிக்க எதிர்ப்பு வெளிநாட்டு கொள்கை.

இரண்டாவது, அவரது அரசு தயவு தாட்சண்யமின்றி பிரிவினைவாத, பயங்கரவாத, பாசிச புலிகளை ஒழித்துக் கட்டியது. அத்துடன் போர்க்குற்றங்கள் என்ற போர்வையில் நாட்டின் ஸ்திரத்தன்மையை சீர்குலைக்க எடுத்த முயற்சிகளுக்கு இடமளிக்காமை.

மூன்றாவது, யுத்தத்தின் வடுக்களை துரிதமாக ஆற்றி, நாட்டை பொருளாதார ரீதியில் துரித வளர்ச்சியை (7 வீதம்) நோக்கி இட்டுச் சென்றது.

எது எப்படியிருந்த போதிலும், 1978இல் ஜே.ஆர். தலைமையிலான ஐ.தே.க அரசு கொண்டு வந்த எதேச்சாதிகார அரசியல் அமைப்பை மாற்றாத வரை பிற்போக்கு சக்திகள் வெளிநாட்டு சக்திகளின் உதவியுடன் மீண்டும் மீண்டும் ஆட்சி பீடம் ஏறுவர் என்பதை இந்த தேர்தல் மீண்டுமொருமுறை நிரூபித்திருக்கின்றது.

1977இல் எப்படி அன்றைய ஐ.தே.க, அன்று ஆட்சியில் இருந்த சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அரசின் தற்காலிக பொருளாதார நெருக்கடிகளை பயன்படுத்தி மக்களுக்கு நல்லாட்சி தருவதாக பொய் வாக்குறுதிகள் தந்து ஆட்சியை கைப்பற்றிவிட்டு, பின்னர் 17 வருடங்களாக மக்களையும் நாட்டையும் நரக குழிக்குள் தள்ளினரோ, அச்சொட்டாக அதுபோன்ற ஒரு சூழ்நிலையில்தான் இன்றும் எதிரணியினர் ஆட்சியை கைப்பற்றியுள்ளனர்.

ஒரு புதிய அரசாங்கத்தின் செயல்பாடுகளை கணிப்பிட ஒரு சில நாட்கள் போதாது என்பது உண்மையென்ற போதிலும், புதிய ஜனாதிபதியின் பின்னால் அணிதிரண்டு நிற்கும் உள்நாட்டு – வெளிநாட்டு சக்திகள் யார் யார் என்பதை வைத்து அது எந்தப் பாதையில் செல்லப் போகின்றது என்பதை அனுமானிப்பது ஒன்றும் சிரமமான விடயமல்ல. வெளிநாட்டு வல்லாதிக்க சக்திகள் பெரும் பிரயத்தனப்பட்டு இந்த ஆட்சி மாற்றத்தை கொண்டு வந்தது பொழுதுபோக்கு வேடிக்கைக்காக அல்ல.

எனவே பின்வரும் விடயங்களை புதிய அரசு முனைப்புடன் செயல்படுத்தும் என எதிர்பார்க்கலாம்.

- இதுவரை காலமும் தென்னாசிய பிராந்தியத்தில் உலக வல்லாதிக்க சக்திகளின் மூலோபாய திட்டங்களுக்கு எதிராக இருந்து வந்த ஒரேயொரு நாடான இலங்கை இனிவரும் காலங்களில் அந்த ஆதிக்க சக்திகளின் ஒரு முக்கியமான தளமாக மாற்றப்படலாம்.

- இலங்கையின் செழிப்பு மிக்க வளங்கள் அந்நிய ஏகபோக கம்பனிகளுக்கு தாரை வார்க்கப்படுவதுடன், கட்டுப்பாடற்ற சுரண்டலை இலங்கை மக்கள் மீது நடாத்துவதற்கும் கதவு திறந்து விடப்படும்.

- இலங்கையின் வெளிநாட்டு கொள்கையின் மூலைக்கல்லாக விளங்கிய அணிசேரா கொள்கை

www.padippakam.com

மாற்றப்பட்டு ஏகாதிபத்திய சார்பு கொள்கை பின்பற்றப்படலாம்.

- ஊடக சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் என்ற போர்வைகளில் தேசிய அபிலாசைகளுக்கு விரோதமான நச்சுத்தனமான கல்வி, கலை, கலாச்சார செயற்பாடுகளுக்கு கதவு திறந்து விடப்படும்.

- முன்னைய அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட சகல தேசிய வளர்ச்சி திட்டங்களும் கைவிடப்படலாம்.

- முன்னைய அரசாங்க காலத்தில் நியமனம் பெற்ற சகல சேவைத்துறை ஊழியர்களும் ஒவ்வொருவராக பழி வாங்கப்படலாம்.

- முன்னைய அரசுகள் வழமையாக பின்பற்றியது போல தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்ந்தும் இழுத்தடிக்கப்படலாம்.

இதுபோன்ற இன்னும் பல விடயங்கள் நடைபெறலாம்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசுகள் ஆட்சிக்கு வந்தால் தமிழ் மக்களின் உரிமைகளுக்கென போராட்டங்கள் நடாத்துவதும், ஐ.தே.க ஆட்சிக்கு வந்தால் அரசில் இணைவதுமான கொள்கையைத் தொடர்ந்து பின்பற்றி வரும் தமிழ் தலைமைகளின் கபடத்தனமான போக்குகளையிட்டு இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னும் ஒன்றையும் ஞாபகப் படுத்துவது அவசியம்.

1965இலும் 'தேசிய அரசாங்கம்' என்ற போர்வையில் டட்லி சேனநாயக்கவின் ஐ.தேக. அரசில் ஏழு கட்சிகள் கூட்டுச் சேர்ந்தன. அவற்றில் தமிழ் இனவாதம் பேசிய தமிழரசு, தமிழ் காங்கிரஸ் கட்சிகளும் மறுபக்கத்தில் தீவிர சிங்கள இனவாதம் பேசிய கே.எம்.பி.ராஜரத்ன, ஆர்.ஜீ.சேனநாயக்க போன்றோரும் அடங்கியிருந்தனர். தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வாக மாவட்ட சபைகள் அமைப்பதாக டட்லி தமிழரசு கட்சியினருடன் ஒப்பந்தம் செய்திருந்தார்.

ஆனால் இறுதியில் எதுவுமே வழங்கப்படவில்லை. நாலரை வருடம் ஆட்சியில் ஒட்டிக்கொண்டு இருந்துவிட்டு 1970 தேர்தல் நெருங்கும் சமயத்தில் ஆட்சியை விட்டு வெளியேறி தமிழரசு தலைமை தமிழ் மக்களை ஏமாற்ற முனைந்தது. ஆனால் மக்கள் அவர்களது ஏமாற்றுக்கு எடுபடாமல் 1970ஆம் ஆண்டு தேர்தலில் அவர்களுக்கு நல்ல பாடம் புகட்டினர்.

அந்த தேர்தலில் அ.அமிர்தலிங்கம், ஜீ.ஜீ.பொன்னம்பலம், மு.சிவசிதம்பரம், ஈ.எம்.வி.நாகநாதன், மு.ஆலாலசுந்தரம் ஆகிய தமிழரசு – தமிழ் காங்கிரஸ் தலைவர்களை மக்கள் தோற்கடித்து வீட்டுக்கு அனுப்பி வைத்தனர். இப்பொழுதும் தமிழ் மக்களின் நலன்களை அடகு வைத்து தமது சொந்த நலன்களுக்காக எதிரணி வேட்பாளரை ஆதரித்த தமிழ் தேசிய கூட்டமைப்பினருக்கு அதே வகையான பாடம் ஒன்றை புகட்டுவர் என எதிர்பார்க்கலாம்.

அதுமாத்திரமின்றி, 1977இல் ஆறில் ஐந்து பெரும்பான்மை பெற்று இறுமாப்புடன் 17 வருடங்களாக மக்கள் விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஐ.தே.க அரசு, 1994இல் எப்படி மக்களால் தூக்கி வீசப்பட்டதோ, அதுபோன்ற ஒரு நிலையே மக்களுக்கு எதிராக இன்றைய அரசு செயற்பட்டாலும் ஏற்படும் என துணிந்து கூறலாம். *

---

11ம் பக்கத்தொடர்ச்சி...

நிலைமை பற்றி தமது வழமையான நகைச்சுவையுடன் ஒருமுறை குறிப்பிட்ட கம்யூனிஸ்ட் மு.கார்த்திகேசன், "முன்பெல்லாம் ஏகாதிபத்திய நாடுகள் தமது துப்பாக்கிக் குழாயைத் திறந்து மூன்றாம் உலக நாடுகளை அச்சுறுத்தி அடிபணிய வைத்தார்கள். ஆனால் இன்றோ அந்த ஏழை நாடுகள் தமது எண்ணெய் குழாயை மூடி அந்த செல்வந்த நாடுகளை அடிபணிய வைத்துள்ளார்கள்" எனக் கூறினார்.

இப்பொழுது உலகச் சந்தையில் ஏற்பட்டுள்ள எண்ணெய் விலைச் சரிவை உற்று நோக்குகையில் எண்ணெய் மீண்டும் ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தப்படுகிறதா என்ற ஐயம் எழுகிறது.

இவ்வருடம் யூன் மாதத்தின் பின்னர் உலகச் சந்தையில் எண்ணெய் விலை 30 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. இதனால் அமெரிக்கா, கனடா உட்பட பல வளர்ச்சி அடைந்த நாடுகளில் எண்ணெயின் விலை குறைத்து விற்கப்படுகிறது. இந்த விலை குறைப்புக்கான காரணம் எண்ணெய் உற்பத்தி அதிகரித்திருப்பதுதான் காரணம் என்று கூறப்படுகிறது.

இந்த எண்ணெய் விலை குறைப்பால் அதிகம் பாதிக்கப்படப்போவது எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகள்தான் என்றாலும், அதிகம் பாதிக்கப்படப் போவது இன்றைய நிலையில் மேற்குலகிற்கு எதிரான அணியில் முன்னணியில் நிற்கும் நாடுகளான ரஸ்யா, ஈரான், வெனிசூலா என்பவைதான். ஏனெனில் இந்த நாடுகள் தமது தேசிய வருவாயிலும், அந்நியச் செலாவணியிலும் பெரும் பகுதியை எண்ணெய் வளம் மூலமே பெற்று வருகின்றன.

ஏற்கெனவே உக்ரைன் பிரச்சினை சம்பந்தமாக அமெரிக்கா, கனடா உள்ளிட்ட மேற்குலகம் ரஸ்யா மீது பல பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. அதேபோல, ஈரானின் அணு உற்பத்தி முயற்சிகள் காரணமாக அந்நாட்டின் மீதும் பல பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. இன்னொரு பக்கத்தில் 50 ஆண்டுகளுக்கு மேலாக அமெரிக்காவால் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டிருக்கும் கியூபாவுக்கு மிகக்குறைந்த விலையில் வெனிசூலா எரிபொருள் வழங்குவதனாலும், அந்நாடு தீவிரமான ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடாக இருப்பதனாலும் அந்நாட்டிலும் அரசுக்கெதிரான குழப்பங்கள் தூண்டிவிடப்பட்டுள்ளன. வெனிசூலாவுக்கு கடந்த ஒக்ரோபர் மாதம் ஏற்றுமதி வருமானத்தில் கிடைத்த வருமானத்தில் 95 வீதம் எண்ணெய் ஏற்றுமத் மூலமே கிடைத்தது.

இந்த நிலைமையில் தற்போதைய எண்ணெய் விலைச் சரிவு இந்த நாடுகளை மிகவும் மோசமாகப் பாதித்து, அந்நாடுகளின் பொருளாதார நிலையில் பெரும் நெருக்கடியை உருவாக்கும் என்பது திண்ணம்.

தற்போதைய விலை குறைப்பு திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்டதா அல்லது 'காகம் இருக்க பனம் பழம் விழுந்த' கதையா என்பதை இன்னும் சொற்ப காலத்துக்குள் அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும்.

**— பொன்னா**


படிப்பகம்

www.padippakam.com

'Vaanavil' is a registered member of the National Ethnic Press and Media Council of Canada
வானவில்

# கியூபாவில் 25 பேருக்கு ஒருவர் மருத்துவ சேவைத்துறையில் பணி புரிகின்றார்!

உலகிலேயே மிகச் சிறந்த வைத்திய சேவை உள்ள நாடுகளில் சின்னஞ்சிறிய சோசலிச நாடான கியூபாவும் ஒன்று. 11 மில்லியன் (1கோடி 10 இலட்சம்) சனத்தொகை கொண்ட அந்த நாட்டில் 440,000 பேர் வைத்தியத்துறையில் பணி புரிகின்றனர்! அதாவது 25 பேருக்கு ஒருவர்!!

இன்று உலகின் பல நாடுகளில் கியூப வைத்தியர்கள் பணி புரிகின்றனர். அத்துடன் உலகின் பல நாடுகளிலிருந்து பல்லாயிக்கணக்கான மாணவர்கள் கியூபாவுக்கு சென்று மருத்துவம் கற்கின்றனர். சமீபத்தில் மேற்கு ஆபிரிக்காவில் எபோலா (Ebola) என்ற ஆட்கொல்லி நோய் தாக்கிய போது, அங்கும் கியூபா தனது 256 வைத்தியர்களை அனுப்பி வைத்தது.

1959இல் கியூபாவில் ஃபிடல் கஸ்ட்ரோவின் தலைமையில் புரட்சி நடைபெற்று அங்கு ஒரு சோசலிச அரசு அமைந்த நாளிலிருந்து அந்நாட்டின் மீது அமெரிக்கா இறுக்கமான பொருளாதாரத் தடையை மேற்கொண்டு வருகின்றது.

1990இல் சோவியத் யூனியன் வீழ்ச்சி அடைவதற்கு முன்னர், அந்த நாடும் அதன் கிழக்கு ஐரோப்பிய கூட்டாளி நாடுகளும் கியூபாவுக்குத் தாராளமாக உதவி வந்தன. அந்த நாடுகளிலிருந்த சோசலிச அரசுகள் வீழ்ச்சி அடைந்த பின்னர், அந்த உதவிகள் கிடைப்பது குறைந்துவிட்டது. அந்தச் சூழ்நிலையில் கியூபாவின் சோசலிச அரசாங்கம் வீழ்ச்சி அடைந்துவிடும் என அமெரிக்காவும், அதன் மேற்கத்தையக் கூட்டாளிகளும் கனவு கண்டன. ஆனால் அதன் பின்னரும் கியூபா உறுதியுடன் உலக அரங்கில் எழுந்து நிற்கிறது.

அதற்கான காரணம் கியூபாவின் வீரமிக்க மக்கள்தான். மனித வாழ்வுக்கு பொருளாதாரம் ஒரு முக்கியமான காரணம் என்ற போதிலும், மக்களே தீர்க்கமான சக்தி. இதைத்தான் மாஓ, "மக்கள், மக்கள் மட்டுமே வரலாற்றின் உந்துசக்தி ஆவர்" என்றும், "கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் இருக்கும்வரை மக்களால் சகலவிதமான அற்புதங்களையும் நிகழ்த்த முடியும்" என்றும் குறிப்பிட்டிருக்கிறார். அதையே கியூப கம்யூனிஸ்ட் கட்சியும், கியூப மக்களும் செய்கின்றனர்.

கஸ்ட்ரோ முதுமை காரணமாக நாட்டின் தலைமைப் பொறுப்பிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர், அவரது இளைய சகோதரரும், புரட்சியில் பங்கேற்றவருமான ராவுல் கஸ்ட்ரோ ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். அவர் காலத்துக்கேற்ற பல பொருளாதார, நிர்வாகச் சீர்திருத்தங்களை மேற்கொண்டதின் விளைவாக, கியூபா ஓரளவு சந்தைப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட சோசலிச அமைப்புக்கு மாறியது. தனிப்பட்ட சிறு விவசாயமும், சிறு கைத்தொழில்களும் அனுமதிக்கப்பட்டன. கைத்தொலைபேசி, இணையத்தள பாவனைகளுக்கு இருந்த கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டன. வெளிநாடுகளுக்கு செல்வதற்கு இருந்த பல தடைகள் நீக்கப்பட்டன. உல்லாசப்பயணத்துறை மேலும் ஊக்குவிக்கப்பட்டது.

இதுபோன்ற நடவடிக்கைகளினால் மேற்கு முதலாளித்துவ நாடுகளின், சோசலிச கியூப அரசு வீழ்ந்துவிடும் என்ற எதிர்பார்ப்பு முறியடிக்கப்பட்டு, கியூபா தனது நிலையை ஓரளவு ஸ்திரப்படுத்திக் கொண்டது.

அத்துடன் அருகில் உள்ள எண்ணெய் வளம்மிக்க வெனிசூலா சாவேஸ் உயிருடன் இருந்த காலத்தில் இருந்து இன்றுவரை கியூபாவுக்கு பல வழிகளிலும் உதவி வருகின்றது. வேறு சில ஏகாதிபத்திய எதிர்ப்பு தென் அமெரிக்க நாடுகளும் கியூபாவுக்கு உதவி வருகின்றன. இவை தவிர, சீனா, வியட்நாம் போன்ற சோசலிச நாடுகளும் கியூபாவுக்கு முடியுமான உதவிகளைத் தோழமையுடன் செய்து வருகின்றன.



அத்துடன் அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் உக்ரைனில் இருந்த ரஸ்யாவுக்குச் சார்பான சட்டபூர்வமான அரசாங்கத்தை வலதுசாரிக் கிளர்ச்சி மூலம் கவிழ்த்த பின்னர், புதிய ரஸ்ய – மேற்குலக பனிப்போர் ஆரம்பாகியுள்ள சூழலில், ரஸ்யாவின் புடின் அரசாங்கம் அமெரிக்காவின் கோடிக்குள் இருக்கும் கியூபாவுக்கு புதிய மேலதிக உதவிகளை வழங்க ஆரம்பித்துள்ளது.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, இவ்வருடம் கியூபா மேற்கொண்டிருக்கும் வெளிநாடுகளுக்கான மருத்துவ சேவையின் மூலம் அந்நாட்டுக்கு 8.2 பில்லியன் (Billion) டொலர்கள் வருமானம் கிடைக்கும் என அந்நாட்டுத் நாளிதழான 'கிரன்மா' (Granma) தெரிவித்துள்ளது. இதன் மூலம் உற்பத்தி துறைகள் மூலம் மட்டுமின்றி, சேவைத் துறைகள் மூலமும் வருமானமீட்ட முடியும் என்பதை, 55 வருடங்களுக்கும் மேலாக அமெரிக்காவின் பொருளாதாரத் தடையால் விலங்கிடப்பட்டிருக்கும் சோசலிச கியூபா நிரூபித்துள்ளது.

**–ராகுல்**


படிப்பகம்